பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a News paper in Sri Lanka

வலம்புரி

VALAMPURI

விலை ரூபா.7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | மாசி 23 | சனிக்கிழமை | (06-03-2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 78

SRI MURUGAN

TELE COMMUNICATION & AGENCY POST OFFICE

Computer Systems

303, K.K.S. ROAD, JAFFNA

# தளபதி கருணாவின் நிலைப்பாடு குறித்து

# தேசியத் தலைவர் பிரபாகரனுடன் தளபதிகள் மந்திராலோசனை

## இன்று விசேட பத்திரிகையாளர் மாநாடு

(நமது நிருபர்)

**தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் மட்டு. அம்பாறை மாவட்ட மூத்த தளபதி கேணல் கருணா அம்மானின் நிலைப்பாடு குறித்து, கிழக்கு மாகாணத் தளபதிகள் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனுடன் தீவிர மந்திராலோசனையில் ஈடுபட்டுள்ளனர். தேசியத் தலைவருடனான மந்திராலோசனையில் எடுக்கப்படும் முடிவுகள் குறித்தும், இதுவிடயத்தில் விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்தின் உறுதியான நிலைப்பாடு குறித்தும் இன்று கிளிநொச்சியில் இடம்பெறும் விஷேட பத்திரிகையாளர் மாநாட்டில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவுள்ளது.**

மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட மூத்த தளபதி கேணல் கருணா அம்மானின் கருத்து நிலைப்பாட்டினால் ஏற்பட்டுள்ள நெருக்கடி குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் கடந்த இரு தினங்களாக தீவிர ஆலோசனையில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மட்டு. அம்பாறை விஷேட தளபதி ரமேஷ், அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பாளர் ரமணன், மாவட்டத் தளபதி ராம், துணைத் தளபதி பிரபா ஆகியோர் கிழக்குமாகாணத்திலிருந்து வன்னிக்கு அழைக்கப்பட்டு தலைவர் பிரபாவுடன் தீவிர மந்திராலோசனையில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, விடுதலைப் புலிகளின் மத்திய குழுவும் இது விடயம் குறித்து தீவிரமாக ஆராய்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆலோசனைகளின் பின்னர் விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் எடுக்கும் உறுதியான முடிவுகள் குறித்து இன்று காலை 10.30 மணியளவில் கிளிநொச்சியில் இடம்பெறும் விசேட பத்திரிகையாளர் மாநாட்டில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவுள்ளது.

இப்பத்திரிகையாளர் மாநாட்டில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் முக்கியமாகக் கலந்து கொள்வார் என பி.பி.சி. நேற்று இரவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, தலைவர் பிரபாவுடனான சந்திப்புக் குறித்து மட்டு. அம்பாறை விஷேட தளபதி ரமேஷ் தமிழ்நெட் இணையத்தளத்திற்கு தகவலை வெளியிட்டுள்ளார். அதில் மட்டக்களப்பு நிலைவரம் குறித்து தலைவர் பிரபாவுடன் விரி

(12ஆம் பக்கம் பார்க்க)

## புதிய போர்நிறுத்த ஒப்பந்தம் செய்யும் தளபதி கருணாவின் கோரிக்கை நிராகரிப்பு

### பாதுகாப்பு அமைச்சு செயலாளர் ஹேரத் அறிவிப்பு

(நமது நிருபர்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு. அம்பாறை மூத்த தளபதி கேணல் கருணா அம்மானுடன் தனியான யுத்தநிறுத்த ஒப்பந்தம் எதுவும் செய்துகொள்ளப்படமாட்டாது என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து பிரிந்து தனிவழி செல்ல விரும்பி மட்டு.அம்பாறை மூத்த தளபதி கேணல் கருணா அம்மான் (விநாயகமூர்த்தி முரளிதரன்) அரசு தன்னுடன் யுத்த நிறுத்த உடன்படிக்கை செய்து கொள்ளவேண்டும் என விடுத்த கோரிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

2002ஆம் ஆண்டு ஐக்கிய தேசிய

(12ஆம் பக்கம் பார்க்க)

## தலைவரின் நேரடி கட்டுப்பாட்டில் இயங்குவதற்கு கருணா விருப்பம்!

### அவரைச் சந்தித்த செய்தியாளர் தெரிவிப்பு

தளபதி கருணாவுக்கும், புலிகளின் தலைவருக்கும் இடையில் நெருக்கடி நிலை இருப்பதாக முதலில செய்தி வெளியிட்ட ஏபிசி நிறுவனத்தின் செய்தியாளர் திருமதி சிமாலி சேனநாயக்கா கருணாவுடன் இடம்பெற்ற சந்திப்புக் குறித்து பி.பி.சியின் சந்தேசியாவுக்கு நேற்றுப்பேட்டியளித்திருந்தார்.

அவர் அளித்த பேட்டியில் தலைவர் பிரபாகரனின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் சுதந்திரமாக இயங்குவதற்கு கருணா விருப்பம்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வெலிக்கடைச் சிறையில் கைதிகளிடையே மோதல்

### 20பேர் படுகாயம்

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறையில் நேற்று மாலை ஏற்பட்ட கைகலப்பில்20 கைதிகள் படுகாயமடைந்துள்ளனர்.

காயமடைந்த 20 பேரும்சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த பாதாள உலகக் குழுக்களுக்கிடையே ஏற்பட்ட மோதலினாலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஒரு குழுவினருக்கு உணவு நேரத்திற்குச் சென்றதாகவும், உணவு பிந்திச் சென்ற குழுவினரை இவர்கள் கேலி செய்ததாகவும், இதனையடுத்தே மோதல் ஏற்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இம்மோதலை அடுத்து கண்ணீர்ப் புகைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட போதிலும், நீண்ட நேரத்திற்குப் பின்னரே நிலைமை கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டது.(ச)



எமது சமகால நகர்வுகளே!
விமோசனம் மிக்க எதிர்காலத்தை தீர்மானிக்கும்!
கொடுத்த வாக்குறுதிகளையும்
எடுத்த வாக்குகளையும் நாம் மறப்பதில்லை...
தேசத்தின் விடிவுக்காக வீணைக்கு வாக்களியுங்கள்!



X

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)

(8504)



மீனவர்கள், விவசாயிகள்
முன்னேற்றத்திற்காக
தொடர்ந்தும் குரல் கொடுத்திட...



X

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு க.சுரேஷ் பிரேமச்சந்திரன்

# செய்தித் துளிகள்

## யோகாசன தியான பெயர்ப்பலகை திரைநீக்கம

(யாழ்ப்பாணம்)

யோகாசன தியானப் பெயர்ப பலகைத் திரைநீக்க நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00மணிக்கு நாவலர் மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்து சமய விவகார அலுவல் கள் அமைச்சின் உதவிப்பணிப் பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் தலைமையில் நடை பெறவுள்ள மேற்படி நிகழ்வில், இந்து சமய விவகார அலுவல் கள் அமைச்சின் மதியுரைஞரும், வல்லிபுர ஆழ்வார் ஆலய அறங் காவலர் சபைத்தலைவருமான இ. அன்னலிங்கம் பிரதமவிருந்தி னராகக் கலந்து கொண்டு பெயர்ப் பலகையைத் திரைநீக்கம் செய்து வைக்கவுள்ளார். (உ-18)

## மெய்வன்மைப் போட்டி

யா/மணற்காடு றோ.க.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பி.ப. 2.30 மணிக்கு பாடசாலை மைதா னத்தில் பாடசாலை அதிபர் திரு. கு.குலசிங்கம் தலைமையில் இடம் பெறும். இந்நிகழ்விற்கு மணற்காடு பங்குத்தந்தை அருட்பிதா றோய் பேடினன் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிப்பார். (யே-45)

## பன்னிரு திருமுறைப் பாராயணம்

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்தப் பௌர்ணமி தினத்தில் நடாத்திவரும் அகத்தி யர் தேவாரத் திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறைப்பாராயணம் என்பன இன்று காலை 9.30 மணிமுதல மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நல்லூர் நாவலர் மணிமண்டபத் தில் இடம்பெறவுள்ளன. (உ-18)

## கூட்டம்

(இணுவில்)

உடுவில் கமநல சேவைகள் நிலையத்தின் இம்மாத நிர் வாகக் கூட்டம் எதிர்வரும் 8ஆம் திகதி மு.ப. 10.00 மணியளவில் நிலைய மண்டபத்தில் இடம்பெற வுள்ளது.

இதில் கமக்காரர் ஓய்வூதியத திட்டம், விவசாய அமைப்புக் களின் தொழிற்சங்க நடவடிக் கைகள், நியாப்திட்டச் .செயற் பாடுகள் ஆகிய விடயங்கள் குறித்துப் பிரஸ்தாபிக்கப்பட வுள்ளது. (உ-122)

## மகளிர் தினம்

(சில்லாலை)

அகதிகள் புனர்வாழ்வு நிறு வனத்தின் பெண்கள் அபிவிருத் தித் திட்டப்பிரிவு 20 கிராம மாதர் சங்கங்கள், மாதர் குழுக்களுடன் இணைந்து நடாத்துகின்ற சர்வ தேச மகளிர் தினம் "பெண் களின் உரிமைகளை மீட்டெடுப் போம்" என்ற தொனிப்பொருளில் எதிர்வரும் 8ஆம்திகதி திங்கட் கிழமை நல்லூர் நாவலர் மண்ட பத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் ,கருத்துரைகள் ஆய்வு ரைகள், பெண்ணிய அரங்கு ஆகியன இடம்பெறவுள்ளன.(உ-58)

## வீதி ஓரங்களில் முட்செடிகள்

(இணுவில்)

காங்கேசன்துறை வீதியின் சுன்னாகம் தொடக்கம் இணு வில் வரையான பகுதிகளில் இருமருங்குகளிலும் முட் செடி கள் வளர்ந்து காணப்படுகின்றன.

கவனிப்பார் இன்றி இச் செடிகள் பற்றைகளாக வளர்ந் துளளதால் வீதியால் பயணிக கும் பாதசாரிகள் பெரும் அசௌ கரியங்களை அனுபவித்து வரு கின்றனர். (உ-112)

## வினாடி வினாப் போட்டி

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மகளிர் தினத்தை யொட்டி எதிர்வரும் திங்கட் கிழமை பெண்கள் மாத்திரம் பங்கு கொள்ளும் வினாடி- வினாப் போட்டி ஒன்று நடாத்தப்பட வுள்ளது.

கில்னர் பாலர் பாடசாலைப் பிள்ளைகளின் பெற்றோர் மற் றும் மெதடிஸ்த சிறுவர் இல் லத்தினர் ஆகியோரின் அனு சரணையுடன், யாழ். மாநாகர சுகாதாரப் பிரிவினரால் 'மகளிரின் முக்கியத்துவம்' எனும் தொனிப் பொருளில் நடாத்தப்படவுள்ள வினாடி வினாப் போட்டியானது, அன்றையதினம் காலை 9.30 மணிக்கு ஜே/101 கிராம சேவகர் பிரிவிலுள்ள கில்னர் பாலர் பாடசாலை மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

இவ் வினாடி-வினாப் போட் டியில் பங்குபற்றி வெற்றி பெறுவோருக்குப் பெறுமதிமிக்க பரிசில்களும் வழங்கப்படவுள் ளமை குறிப்பிடத்தக்கது.(உ-18)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தீவகக் கல்வி வலயத்தில் உள்ள வேலணை தெற்கு ஐய னார் பாடசாலையின் அதிபர் பதவிக்கு தகுதியானவர்களிட மிருந்து விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

இலங்கை ஆசிரியர் சேவை தரம் 2-1ஐயும், தரம்1ஐயும் சேர்ந்தவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்கள் யாவும் இம் மாதம் 15ஆம்திகதிக்கு முன்ப தாக தீவக வலயக்கல்விப் பணி மனைக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும் என தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.(உ-4)

## சமுர்த்தி மகா சங்கம் அங்குரார்ப்பணம்

(கல்வயல்)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள 4 சமுர்த்தி வங்கிகளை இணைத்து சமுர்த்தி மகாசங்கம் அங்கு ரார்ப்பணம் செய்து வைக்கப் பட்டுள்ளது.

கடந்த 28ஆம்திகதி சாவகச் சேரி இந்துக்கல்லூரி மண்ட பத்தில் அங்குரார்ப்பண வைப வம் இடம்பெற்றது. சாவகச்சேரி பிரதேச செயலர் எஸ். ஸ்ரீநிவா சன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் இம் மகாசங்கத் திற்குரிய நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. (உ-36)

## விவசாயப் பயிற்சி வகுப்பு

(இணுவில்)

நிக்கொட் நிறுவனத்தினால் மரக்கறிப்பயிர்ச்செய்கை பற்றிய 3 நாள் விவசாய பயிற்சி வகுப்பு க்கள் நடாத்தப்படவுள்ளன.

இம்மாதம் 17,18,19ஆம் திகதிகளில் திருநெல்வேலியில் உள்ள விவசாயப் பயிற்சிக் கல் லூரியில் நடைபெறவுள்ள இப் பயிற்சி வகுப்புக்களில் உடுவில் விவசாயப் போதனாசிரியர் பிரிவைச் சேர்ந்த 32 விவசாயிகள் முதற்கட்டமாக பங்குபற்றவுள்ள னர்.

இப்பயிற்சிக்குரிய பயனாளி கள் தெரிவுகள் யாவும் உடுவில் விவசாயப்போதனாசிரியர் மற்றும் உடுவில் விவசாயச் சம்மேளனத் தலைவர் ஆகியோருடாக மேற் கொள்ளப்பட்டுவருகின்றன. (உ-112)

## அதிபர்பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

(வடலியடைப்பு)

வலிகாமம் கல்வி வலயத் தில் உள்ள ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியா லயத்தின் அதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட் டுள்ளன.

இலங்கை அதிபர் சேவைத் தரத்தைச் சேர்ந்தவர்களும் இலங்கை ஆசிரியர் சேவைத்தரம் 2-1ஐயும், 1ஐயும் சேர்ந்த வர்களும் இப்பதவிக்கு விண்ணப் பிக்கலாம். தகுதியுடையோர் இம் மாதம் 10ஆம்திகதிக்கு முன்னர் வலிகாமம் வலயக்கல்விப் பணி மனையில் தமது விண்ணப்பங் களைச் சமர்ப்பிக்கலாம் என வலிகாம வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் க.சுந்தரசிவம் அறி வித்துள்ளார். (உ-21)

## வீரர்களுடன் சந்திப்பு

தமிழீழ விளையாட்டுத் துறை யின் அறிமுக அட்டைக்காக விண்ணப்பித்த விளையாட் டுக்கழகங்களின் வீரர்களுக்கான மிக முக்கியமான சந்திப்பொன்று எதிர்வரும் 8ஆம் திகதி திங் கட்கிழமை பி.ப. 3 மணிக்கு வீர சிங்கம் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

எனவே, சகல விளையாட்டுக் கழகங்களினதும் சம்பந்தப்பட்ட வீரர்களைத் தவறாது இதில் கலந்து கொள்ளுமாறு கேட்கப் பட்டுள்ளது.

இச்சந்திப்பில், தமிழீழ விடு தலைப்புலிகளின் விளை யாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா மற்றும் யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறைப பொறுப் பாளர் மாதுளன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.(உ-18)



# தென்மராட்சி கல்வி வலயத்தில் முறைசாராக் கற்கை நெறி

தென்மராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளில் எதிர்வரும் 15ஆம் திகதி முதல் முறைசாராக் கல்வித் திட்டத்தின் கீழ் புதிய பாடநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

இதனடிப்படையில், சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம் ஆகியவற்றில் கணனிக்கற்கை நெறியும், கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் சுருக்கெழுத்தும், அல்லாரை அ.த.க.பாடசாலை, சாவகச்சேரி றோ.க.த.க. பாடசாலை மற்றும் மந்துவில் றோ.க.த.க. பாடசாலை ஆகியவற்றில் எழுத்தறிவூட்டலும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அத்துடன், சாவகச்சேரி மகளிர் கல்லூரி மற்றும் வரணி மகாவித்தியாலயம் ஆகியவற்றில் உடை அமைத்தல் பாடநெறியும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஆர்வமுள்ள மாணவர்கள் அந்தந்தப் பாடசாலை அதிபர்களிடம் தமது விண்ணப்பங்களை ஒப்படைக்குமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் மேலும் கேட்டுள்ளார். (உ-37)

## யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த ஏழு ஆண்டுகளில் 6,480 பேர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த 7ஆண்டுகளில் 6 ஆயிரத்து 480 பேர் உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலைப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

வீதிவிபத்து, புற்றுநோய், மார் படைப்பு, காசநோய் போன்ற பல் வேறுபட்ட நோய்த் தாக்கங்களுக்கு இலக்காகி யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தவர்களே சிகிச்சை பலனளிக்காத நிலையில் உயிரிழந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அநத வகையில் 1997ஆம் ஆணடு 820 பேரும் 1998ஆம் ஆண்டு 883பேரும் 1999ஆம் ஆண்டு 875 பேரும், 2000ஆம் ஆண்டு 770பேருமெ, 2001ஆம் ஆண்டில் 932பேரும் 2002 1012 பேரும், 2003ஆம் ஆண்டில் 1188 பேரும் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-4)

## மிதிவெடி அகற்றும் குழுவுக்கு மரம் வெட்டுவோர் இடையூறு

(யாழ்ப்பாணம்)

கற்கோவளம் பகுதியில் மிதிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள டனிஷ் மிதிவெடியகற்றும் குழு பல்வேறு இடையூறுகளைச் சந்தித்து வருவதாகக் கூறப்படுகின்றது.

மேற்படி பகுதியில் மிதிவெடி அகற்றப்படாத இடங்களில் நாட்டப்பட்டுள்ள "மிதிவெடிகவனம்" கொணட பலகையை அப்புறப்படுத்தும் நடவடிக்கைகள் அடிக்கடி இப்பகுதியில் இடம்பெற்று வருகின்றன.

இப்பகுதியில் உள்ள மரங்களைத் தறிப்பதற்காகவே விறகு வியாபாரிகள் இவ்வாறு அபாயகரமான வேலைக்குள் இறங்குவதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை மிதிவெடி அகற்றப்பட்ட பகுதிகளிலும் மிதிவெடி கவனம் என்ற பலகையை நாட்டிவிட்டுச் செல்வதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ-16)

## அம்மா நலமா? வெளியீட்டு விழா

(மருதங்கேணி)

நிதர்சனம் நிறுவனத்தின் திரைப்பட உருவாக்கப் பிரிவினரால் தயாரிக்கப்பட்ட ந.கேசவராஜனின் 'அம்மா நலமா?' திரைப்பட வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. (உ-35)

## மாமாங்க தீர்த்த உற்சவம்

(தும்பளை)

பருத்தித்துறை தும்பளை தும்புருவளைப் பிள்ளையார் ஆலயத்தில 12 வருடங்களுக்கு ஒருமுறை வரும் மாமாங்கத் தீர்த்த உற்சவம இன்று இடம்பெறவுள்ளது. அதி காலை 4.30 மணிக்கு ஆலயத்தில் பூசை இடம்பெற்று பின்னர் 6 மணிக்கு முனைக் கடற்கரையில் தீர்த்தம் ஆடப்படவுள்ளது.(உ-45)

## தையல் பயிற்சி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

நலலூர் ஜே/108 கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த யுவதிகளுக்கான தையல் பயிற்சி வகுப்பு இன்று சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு ஜீவாமிர்தம் தலைமையில் ஆரம்பமாகவுள்ளது. இப்பயிற்சி வகுப்பில் யுவதிகள் இணைந்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (ச)

## நாய்களுக்குத் தடுப்பூசி

(தம்பசிட்டி)

இன்று காலை 9.00 மணிதொடக்கம் 12.00 மணிவரை பருத்தித்துறை கால்நடை வைத்தியசாலையில் வைத்து பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட பகுதி வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது. (உ-45)

## விசேட பாட அனுமதி

(யாழ்ப்பாணம்)

விசேடபாட அனுமதியின் கீழ, யாழ். பல்கலைக்கழகத்திற்கு 200 பேர் அனுமதி பெற்றுள்ளனர்.


இவர்களது பெயர்ப்பட்டியலை யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி அலுவலக அறிவிப்புப் பலகையில் பார்வையிடலாம். (உ)



கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் சமயதீட்சை பெற்ற மாணவர்களுககான பரிசளிப்பு விழா வட மாநில இந்து மாமன்றத்தின் ஏற்பாட்டில், அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட நல்லை ஆதீன முதல்வர் கல்லூரிச் சமூகத்தினரால் வரவேற்று அழைத்துச் செல்லப்படுகின்றார்.



இந் நிகழ்வில் கலந்துகொண்ட வட மாநில இந்து மாமன்ற அமைப்பாளர் எஸ்.குணராசா உரையாற்றுவதையும்,



இதில் கலந்து கொண்ட கல்லூரி மாணவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

சங்கரியின் வெற்றி சத்தியத்தின் வெற்றி

'என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம் என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்'






- தமிழினம் சுயநிர்ணய உரிமையுடன் தாயகத்தில் வாழ்ந்திட.....
- இடம்பெயர்ந்த நம் இனம் மீண்டும் தன்நிலத்தில் குடியமர.....
- இடிபாடுகளில் சீரழிந்த பிரதேசம் புதுப்பொலிவுடன் புனரமைத்திட.....
- பேச்சுவார்த்தையில் தமிழினத்தின் தனித்தரப்பாக விடுதலைப் புலிகளுடன் மட்டுமே பேசவேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்திட.....
- தமிழர் தம் தாயகத்தில் ஜனநாயக உரிமை மறுக்கப்படவில்லையென்பதை சர்வதேசம் ஏற்று அங்கீகரிக்கவும்....



மூத்த தலைவர்களின் அகிம்சைவழி நின்று உரிய இலக்கினை சென்றடைய

திரு.வீ. ஆனந்தசங்கரி அவர்களின்

(தலைவர் - தமிழர் விடுதலைக் கூட்டணி)

தலைமையிலான

சுயேச்சைக் குழு : 01

(தலைமை வேட்பாளர் இலக்கம்)

பூட்டுச்சின்னத்திற்கு வாக்களித்து வெற்றிபெறச் செய்வோம்

அரச ஊடகங்களில் இருந்து

# மக்களை அந்நியப்படுத்தும் முயற்சியில் ஐக்கியதேசிய முன்னணி ஈடுபடுகிறது

## இலங்கை ஒலிபரப்புக் கூ.தா.பணிப்பாளர் சுட்டிக்காட்டு

(யாவத்த)

**அரச ஊடகங்கள் ஜனாதிபதிக்குச் சார்பாகச் செயற்படுவதாக, ஐக்கிய தேசிய முன்னணியினர் செய்யும் பிரசாரம் அரசியல் இலாபத்தை இலக்காகக் கொண்ட விசமத் தனமான நடவடிக்கை என்று விமர்சித்துள்ளார். இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் நாயகமும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான அமுல்கலாம்.**

இது விடயமாக மேலும் கருத்து தெரிவித்துள்ள அமுல்கலாம்,

அரசியலில் ஏற்பட்ட நெருக்கடி நிலைமை காரணமாக கடந்த நவம்பர் மாதம் 4 ஆம் திகதி ஊடகத்துறையை ஜனாதிபதி பொறுப்பேற்றார். ஆனால், அரச ஊடகங்கள் எனக் குறிப்பிடப்படும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ரூபவாகினி ஒளிபரப்புக் கூட்டுத்தாபனம் ஐ.ரி.என் செய்திச் சேவை, லேக்கவுஸ் நிறுவனம் என்பன தம் ஊடக தர்மக் கொள்கைகளை மாற்றாது அனைத்து அரசியல் கட்சிகளது கருத்துக்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கி வருகின்றன.

ஜனாதபதியின் பொறுப்பிலுள்ள ஊடகமாக இருந்தபோதும் ஜனாதிபதியையே சர்வாதிகாரி எனக் கூட விமர்சிக்கும் மாற்றுக் கருத்துகளுக்கும் பூரண சுதந்திரம் வழங்கினோம்.

பெரும்பான்மையினக்கட்சிகள், சிறுபான்மையினக் கட்சிகள் என்ற பாகுபாடுகள் இன்றி அனைவருடைய கருத்துகளிற்கும் சந்தர்ப்பம் வழங்கினோம்.

இவ்வாறு நாம் பல வகைகளில் சமநீதியுடன் இயங்கி வருகின்ற போதும் பக்கச்சார்பாக செயற்படுவதாக எம் மீது ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் பொய்க் குற்றச்சாட்டுக்களை சுமத்துகிறது.

ஒரு பொய்யை திரும்பத்திரும்பச் சொல்வதால் அதன் மூலம் உண்மை போன்ற மாயையை உருவாக்கலாம். இவ்வாறான ஒரு மாயையை உருவாக்கும் முயற்சியிலேயே ஐக்கியதேசிய முன்னணி செயற்பட்டு வருகிறது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசிடம் இருந்து ஜனாதிபதி ஊடகத்துறையை பொறுப்பேற்ற பின்னர் இத்தகைய பொய்ப் பிரசாரங்களைச் செய்வதில் ஐக்கிய தேசிய முன்னணி தீவிரமாகச் செயற்பட்டு வருகிறது. இது அவர்கள் தம் அரசியல் இலாபத்தை சுவீகரித்துக் கொள்வதற்கான ஒரு முயற்சியாகக காணப்படுகின்றது.

இந் நிலை நாட்டின் அரச ஊடகங்களின் பால் மக்களுக்குள்ள நம்பகத் தன்மையை இழக்கச் செய்கிறது. இது மக்களின் மன உணர்வுகளை மழுங்கடிக்கச் செய்து தனது கவர்ச்சிகரமான பிரசாரங்களின் பால் கவன ஈர்ப்புச் செய்யும் முயற்சியாகும் என்றார்.

இவ்வாறான பொய்ப் பிரசாரங்கள் மூலம் மக்களுக்குச் சொந்தமான அரச ஊடகங்கள் மக்களால் பிரித்து நோக்கப்படுகின்றன.

அரச ஊடகம் என்பது முற்று முழுதாக மக்களுக்குச் சொந்தமானது. அதன் மூலம் அரசாங்கத்தின் அறிவிற்புக்கள் யாவும் மக்களைச் சென்றடைய வேண்டுமென்ற எதிர்பார்ப்பு அனைவரிடமும் உண்டு.

ஆனால் ஐக்கிய தேசிய முன்னணி அரசோ, அரச ஊடகங்களை முற்றாகப் பகிஸ்கரிக்கின்றது. தனது முழு அறிவிப்புக்களையும் தனியார் மயப்படுத்தப்பட்ட ஊடகங்கள் வழியாகவே வெளியிடுகிறது.

எடுத்துக் காட்டாக அண்மையில் பிரதமர் நாட்டு மக்களுக்கு ஆற்றிய விசேட உரை தனியார் ஊடகங்கள் வாயிலாகவே ஒலிபரப்புச் செய்யப்பட்டது. இவ்வுரையை அரச ஊடகங்கள் வாயிலாகச் செய்ய வேண்டும் என்பதற்கு அவர் எவ்வித முயற்சிகளையும் மேற்கொள்ளவில்லை.

இதனால் அரச ஊடகங்கள் ஜனாதிபதியின் கருத்துக்களை மட்டுமே பிரசாரம் செய்யும் ஊதுகுழல் என்ற மனநிலை மக்களிடையே உருவாகி உள்ளது.

தனியார் ஊடகங்களையே மக்கள் அரச ஊடகங்கள் போல நம்பகத் தன்மையுடன் நோக்குகின்றனர். இதனால் மக்களுக்கும் அரச ஊடகங்களுக்கும் இடையேயான இடைவெளி அதிகரித்து விட்டது. தனியார் ஊடகங்களே இன்று அரசாங்கத்தின் முக்கிய ஊடகமாக நோக்கப்படுகின்றன. இந்த நிலை தோன்றுவதற்கும் ஐக்கிய தேசிய முன்னணியின் பொய்ப்பிரசாரங்களும், அரசியல் சுய இலாபம் கருதிய செயற்பாடுகளுமே காரணம். இவை முற்றாகத் தவிர்க்கப்படவேண்டும்.

அத்துடன் அங்கு சுதந்திரத் தேர்தல ஆணைக்குழு பற்றிய தனது கருத்தினைத் தெரிவித்த சட்டத்தரணி அமுல் கலாம்.

சுதந்திரத் தேர்தல் ஆணைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டபின்னரே தேர்தல் நடத்தப்படவேண்டுமென்ற சரத்துடன் 17 வது அரசியல் திருத்தச்சட்டம் பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டது எனினும் ஐக்கிய தேசிய முன்னணி தன் ஆட்சிக்காலம் நிறைவடையும் வரை இக் குழுவை நியமிக்கவில்லை.

இந் நிலையில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி பாராளுமன்றப் பொதுத் தேர்தல் இடம் பெறவுள்ளது. இத் தேர்தல் காலத்தில் சுதந்திரத் தேர்தல் ஆணைக் குழு நியமிக்கப்படாததால் ஏற்படும் முறைகேடுகளுக்கு ஐக்கிய தேசிய முன்னணி அரசே பொறுப்பேற்க வேண்டும்.

ஐக்கிய தேசிய முன்னணி தனது ஆட்சிக்காலத்தில் நிறைவேற்றவேண்டிய சுதந்திர பொலிஸ் ஆணைக்குழு சுதந்திர நீதித்துறை ஆணைக்குழு போன்ற பல சுதந்திர அமைப்புக்களை நிறுவத்தவறி விட்டதாக அவர் மேலும் குற்றம் சாட்டினார். (உ-60,4)

மருந்தகங்களில்

# ஆங்கில அறிவற்றவர்களை வேலைக்கமர்த்தக் கூடாது

## ஆங்கில மருந்தக வணிகர் மன்றம் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

மருந்தகத்தில் வேலை செய்யும பணியாளர்கள் ஆங்கில அறிவுடன் மருந்து மற்றும் அதன் பக்க விளைவுகள பற்றிய பூரண அறிவை உடையவராக இருத்தல் வேண்டும்.

இவ்வாறு வடபிராந்திய யாழ். ஆங்கில மருந்தக வணிகர் மன்றம் தீர்மானம் இயற்றியுள்ளது.

அண்மையில் யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெற்ற அதன் பொதுக் கூட்டத்தில் மேலும் எடுக்கப்பட்ட தீர்மானங்களாவன.

✷ மொத்த விலையில் இருந்து 15 வீத இலாபம் வைத்து விற்கவேண்டும. பொறித்த விலை குறிக்கப்பட்ட பொருட்களுகது, பொறித்த விலையே விற்கப் படவேண்டும். குறைவாகவோ கூடுதலாகவோ விற்கமுடியாது.

✷ விலைப்பட்டியல் தொங்க விடுவதற்குப் பதிலாக மருந்துப் பொருட்களின் சில்லறை விலை அடங்கிய கோவையில் (File) நுகர்வோர் எளிதில் பார்க்கக் கூடியதாக வைத்திருக்கவேண்டும்.

✷ குழந்தைப் பால்மா வகைகளுக்கு வரிவிலக்கு அளிக்கப் பட்டுள்ளதால் பொறித்த விலைக்கே விற்கவேண்டும்.

✷ சில மொத்த வியாபாரிகள் தங்களது ஸ்தாபனத்தில் சில்லறை வியாபாரிகளுக்கு போடும் அதே விலைக்கு விற்பனை செய்வது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனால் நுகர்வோர் மத்தியில் ஏனைய சில்லறை வியாபாரிகள் கேவலமாகக் கணிக்கப்படுகிறார்கள். அதனால் மொத்த விலை, சில்லறை விலை இரண்டும் வெவ்வேறாக வெளிப் படுத்தல் வேண்டும். கண்டிப்பாக இது நடைமுறைப்படுத்தவேண்டும்.

✷ எமது அக்கத்துவம் பெற்றவர்கள் மட்டும் மருந்துப் பொருட்களை கொழும்பில் இருந்து இறக்குமதி செய்யமுடியும் இதனால்இலங்கை அரசிடம் பதிவு பெறாத மருந்துகள், தரம் குறைந்த மருந்துகள், வேறு நாடுகளிடம் இருந்து கடந்தப்பட்ட மருந்துப் பொருட்களின் விற்பனையை தடைசெய்யமுடியும். அத்துடன் நடமாடும் வியாபாரிகளையும் தடை செய்யமுடியும்.

✷ பொருட்களை சுகாதார சட்ட விதிமுறைகளுக்குட்பட்ட முறையில், முறையாக களஞ்சியப்படுத்தல், விநியோகித்தல் இடம்பெற வேண்டும்.

✷ மருந்து வியாபாரம் மேற்கொளளும் ஒவ்வொருவரும் எமது கழகத்தின உறுப்பினராகப் பதிவு செய்து அதற்கான அடையாள அட்டையைப் பெற்றே வியாபாரத்தை நடத்த முடியும்.

✷ எமது கடந்த கால விசேட பொதுச் சபை தீர்மானத்துக்கு இணங்க புதிதாக ஆரம்பிக்கும் மருந்தகங்கள், ஆரம்பிக்க முன்னர் எமது கழகததின் அனுமதியைப் பெற்றே ஆரம்பிக்கவேண்டும். (உ-4)

# அகில இலங்கைச் சைவ மாநாட்டில் இன்று...

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அகில இலங்கைச் சைவ பரிபாலன சபை, நீராவியடி சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடாத்தி வரும் அகில இலங்கைச் சைவ மாநாட்டின் 2 ஆம் நாளான இன்றைய காலை நிகழ்வுகள் 9.30 மணிக்கு பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் இ.குமாரவடிவேல் தலைமையில் இடம்பெறவுள்ளன.

இந் நிகழ்வில் "21 ஆம் நூற்றாண்டில் சைவப் பாடசாலைகளில் சைவம்" என்ற தலைப்பில் செஞ்சொற் செல்வர் ஆறுதிரு முருகனும், "21 ஆம் நூற்றாண்டில் சைவ ஆலங்களின் பரிபாலனம்" என்னும் தலைபபில் சைவபரிபாலன சபையின் நிர்வாக சபை உறுப்பினர் இரா.செல்வ வடிவேலும் "21ஆம் நூற்றாண்டில் சைவ சமயச் சடங்குகளின் நிலை என்ற தலைப்பில் சைவப்புலவர் சு.செலலத்துரையும் விரிவுரைகளை ஆற்றவுள்ளனர்.

மாலை நிகழ்வுகள் பி.ப.2.30 மணிக்கு "இந்து சாதனம்" நிர்வாக சபை உறுப்பினர் இ.மகேந்திரன் தலைமையில் ஆரம்பமாகவுள்ளன.

இதில் "சைவத்தின் வளர்ச்சியில் இன்றைய இளைஞர்களின் பங்களிப்பு" என்ற தலைப்பில் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது. யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரி மாணவர்கள் இதில் கருத்துரையாற்றவுள்ளனர். (உ)

# தபால் மூல வாக்களிப்பு மார்ச் 24,25 ஆம் திகதிகளில்

(கொழும்பு)

எதிர்வரும் பாராளுமன்ற பொதுத் தேர்தலுக்கான தாபால் மூல வாக்களிப்பு எதிர்வரும் 24,25ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க அறிவித்துள்ளார்.

தபால் மூலம் வாக்களிக்கவுள்ள வாக்களார்களின் இடாப்புக்கள் இம் மாதம் 12ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்படவுள்ளது.

மாவட்ட உதவித் தேர்தல் அலுவலகத்தினால் தத்தமது மாவட்டங்களில் விண்ணப்பித்து தகுதியான வாக்காளர்களுக்கான வாக்குச் சீட்டுக்கள் இம் மாதம் 15 ஆம் திகதி அந்தந்த அலுவலகங்களுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது. (ச)

# கடந்தகாலக் கடும் போர்களினால் கரையோர மக்களுக்கே கடும்பாதிப்பு

## காவலூர் உதவி அரசாங்க அதிபர்

(கந்தர்மடம்)

கடந்த காலப்போர் அனர்த்தங்களால் வடக்கு - கிழக்குப் பகுதி



களில் உள்ள கரையோரப் பிரதேசங்கள் வெகுவாகப் பாதிப்படைந்திருப்பதாக ஊர்காவற்துறை உதவி அரச அதிபர் யே.எஸ்.செல்வநாயகம் தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஊர்காவற்றுறை பருத்தியடைப்பில் இடம்பெற்ற கோட்டையடிப் பொதுக்கட்டடத் திறப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கு.கோபாலலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் செம்மணன் ஊர்காவற்றுறைப் பிரதேச சபையின் செயலாளர், பட்டினிக்கு எதிரான இயக்கத்தின் பிரதிநிதி க.இராசேந்திரம் கடற்றொழில் நீரியல் வளத் துறைத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் அ.யோசெப் ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய செல்வநாயகம், தமிழ் பிரதேசங்களில் கரையோரப் பிரதேசங்களே வளம் மிக்கனவாகவும், கவர்ச்சிகரமானவையாகவும் காணப்பட்டன.

ஆனால் காலப்போக்கில் இடம் பெற்ற இனப்பிரச்சினைகளால் இவவாறான பிரதேசங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுப் போயுள்ளன.

இதனால் இங்கு வாழ்ந்த பல் லாயிரக்கணக்கானோர் இடம் பெயர்ந்து அகதிகளாக வாழ்கின்றனர்.

இத்தகைய துன்ப நிலைக்குத் தீர்வுகாண நிரந்தர சமாதானம் ஏற்படுதல் அவசியம் என்றார்.

இந் நிகழ்வில் கலந்துகொண்ட மீன்பிடிநீரியல் வளத்துறை திணைக்கள உதவிப் பணிப்பாளர் அ.யோசெப உரையாற்றுகையில்.

உதவும் நிறுவனங்களால் வழங்கப்பட்டு வரும் உதவிகளை கரையோரப் பிரதேச வாழ்மக்கள் சரிவரப பயன்படுத்தவேண்டும் இவ் உதவிகளைப் பெற்று மக்கள் பயன் அடைவதன் மூலமே இத்த கைய உதவிகளை ஏனைய பிரதேச மக்களுக்கும் பகிர்ந்தளிக்கும் வாய்ப்பு உண்டாகும் என்றார். (உ-112)

## இன்று ஒரு தகவல்

# வாழ்வும் வயதும்

எமர்சனைப் பார்த்து ஒருவர் கேட்டாராம் "உங்கள் வயது என்ன?" என்று. "எனக்குவயது 360 ஆண்டுகள்" என்றாராம் எமர்சன். இது என்ன வேடிக்கையாக இருக்கிறது. 360 வயதா? இவரால் நம்பமுடியவில்லை. இருந்தாலும் மறுபடியும் கேட்டார். "மன்னித்துக் கொள்ளுங்கள் நீங்கள் கூறியதை நான் சரியாகக் கேட்கவில்லை. மறுபடியும் கூறுங்கள் உங்கள் வயது என்ன?" இப்போது எமர்சன் சத்தமாகப் பதில் சொன்னார். "எனக்கு வயது 360 ஆண்டுகள்" என்று.

"என்ன இது... என்னால் இதை நம்பவே முடியவில்லை! இது எப்படி முடியும். முடியாதகாரியமே? எப்படிப் பார்த்தாலும் உங்களுக்கு இப்போது 60 வயதுக்கு மேல் இருக்காது" என்றார் இவர். இப்போது எமர்சன் கூறினார். "நீங்கள் கூறுவது சரி தான். எனது உண்மையான வயது 60 ஆனால் நான் உங் களைவிட 6மடங்கு அதிகமாக வாழ்ந்திருக்கின்றேன். 360 வருடங்களில் எப்படி வாழமுடியுமோ அந்தவிதமாக இந்த 60 ஆண்டுகளைப் பயன்படுத்தி வாழந்திருக்கிருக்கிறேன்" என நரர்.

நாமெல்லாம் யோசிக்கவேண்டிய ஒரு விடயம் இது. நேரம் எனபது குறிப்பிட்டவரம்புக்கு உட்பட்டது என்று நாம் நினைக்கின றோம். அது தவறு. ஒரு நாள் என்பது 24 மணி நேரம் .என்று எல லோரும் நினைககின்றோம். ஆனால் அபபடி அல்ல அது. அது 24 மணி நேரமா 36 மணி நேரமா என்பது நம்மைப் பொறுத்தது. நாம் எத்தனை மணிநேரத்தை எப்படி உபயோகப்படுத்துகின்றோம் என்பதைப் பொறுத்தது. நாம் சிறிது சாமர்த்தியமாக நடந்து கொண்டால் 24 மணி நேரத்தை 48 மணி நேரமாக உபயோகப்படுத்தலாம்.

நம்மில் பலர் வாழவதாக நினைத்துக் கொண்டு உயிருடன் இருக்கின்றனர். இது இரண்டுக்கும் வித்தியாசம் உண்டு. வாழ்வது என்பது வேறு. உயிருடன் இருப்பதுவேறு.சும்மா சமூச்சு விட்டுக்கொண்டிருப்பதெல்லாம் வாழ்க்கையாகி விடுமா? he is living என்று கூறுவதற்கும் He is exiting என்று கூறுவதற்கும வித்தியாசம் உண்டு. உயிருடன் இருப்பது சுலபம் ஆனால் வாழ்வதென்பது அவ்வளவு சுலபமில்லை. இருந்தாலும் அதுதான் நிச்சயமாக நல்லது.

"எப்படி சார் இருக்கின்றீர்கள்?" என்று கேட்டால் "ஏதோ இருக்கின்றேன்" என்று கூறுகின்றனர் பாருங்கள். அவர்கள் எல்லோரும் Exiting ரகம் அவர்கள் காலத்தை விரயம் செய்கின்றனர். நேரத்தை விரயம் செய்கின்றனர். சக்தியை விரயம் செய்கின்றனர். அவர்களின உயிர் மனம் ,உடல எல்லாமே வீண்.

நம்மிடம் உடல் என்ற ஒன்று எதற்கு இருக்கின்றது? நமது மனம் ஆன்மா இவற்றின் விருப்பங்களை நிவிர்த்தி செய்வதற்குத்தான் மனம், உடல், ஆன்மா. போன்றனவெல்லாம் நமக்குக் கிடையத்துள்ள சொத்துக்கள். இவற்றை முறையாக முழுமையாக உபயோகப்படுத்தி வாழ்வது தான் உண்மையான வாழ்க்கை. அப்படி வாழவிட்டால் நாம் வாழ்ந்ததாக அர்த்தம் இல்லை. ஏதோ காலம் தள்ளிக் கொண்டிருக்கின்றோம் என்று அர்த்தம்.

காலம் தள்ளுவதாகக் கூறுகின்றோமே அதுவும் காலத்தை நாம் தள்ளுவதாக நினைத்துக் கொண்டிருக்கின்றோம். அப்படி இல்லை. காலம்தான் நம்மைத் தள்ளிக் கொண்டிருக்கிறது. சீக்கிரம் போய்ச் சேர் என்று.

இயேசு நாதர் தன்னிடம் வந்த ஒரு மனிதனிடம் சொன்னாராம் "நீ இன்னும் 10 நாளா தான் வாழப்போகின்றாய். அதனால் அதற்குள் நீ செய்து முடிக்கவேண்டுமென நினைக்கும் காரியங்களை யெல்லாம் செய்துமுடித்து விடு" என்றாராம். அந்த விநாடிவரை யாரை எப்படி ஏமாற்றலாம் என்று நினைத்துக் கொண்டிருந்தவன் இனிமேல் புண்ணியத்தைத் தேடிக் கொள்ள வேண்டுமென்ற பயத்தில் தன்னால் முடிந்த நல்ல காரியங்களை செய்யத் தொடங்கிவிட்டான். 10 நாள் முடிந்தது. ஆயுள் முடியவில்லை. மீண்டும் இயேசு நாதரிடம் ஓடினான். "எனக்கு இன்று மரணம் நேரும் என்று கூறினீர்களே நான் இன்னும் உயிருடன் இருக்கின்றேனே" என்றான். அவர் புன்னகையுடன் பதில் கூறினார். "10 நாளுக்குள்மரணம்என்று தெரிந்தவுடன் புண்ணியம் தேடவேண்டுமென்ற எண்ணத்தில் பல நற் காரியங்கள் செய்தாய். மனிதனுக்கு ஒவ்வொருநாளும மரணம் ஏற்பட வாய்ப்பு உண்டு. என்ற உண்மையைப் புரிந்து கொண்டு எப்போதும் நன்மை செய்ய ஏன் முயற்சி செய்வதில்லை என்றாரர்ம்.

மனிதன் என்பவன் அப்படி இருகக வேண்டும். ஆனால் பலர் அப்படி இருப்பதில்லை. ஒருவன் வேகமாக ஓடிக்கொண்டிருந்தான் "எங்கே ஓடிக்கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டார் ஒருவர். "இன்னும் 10 நாள் தான் ஆயுள் என்று கடவுள் கூறிவிட்டார் அதுதான் ஓடுகிறேன்" என்றான் இவன். "ஏதாவது நல்ல காரியம் செய்யவா?" என்றார் மற்றவர். "ஆமாம்... என் நண்பனிடம் 10 ரூபா பணம் வாங்குவதற்க ஓடுகிறேன்" என்றான். எதற்கு அது? என்றார் மற்றவர் 10 நாள்தான் ஆயுள் என்று டாக்டர் கூறியது எனக்கு இல்லை. அவனுக்கு அதனால் அவனிடம் இப்போதே ஏதாவது வாங்கினால்தான் உண்டு. அதனால் தான் ஓடுகிறேன். என்றான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# ஜனநாயகத்தை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும்

## ஜே.வி.பி அமெரிக்காவிடம் கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் இடம்பெறும் கொலைகளுக்கு கண்டனம் தெரிவித்தமைமட்டுமன்றி அங்கு ஜனநாயகத்தை உறுதி செய்யவும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க சர்வதேச மன்னிப்புச் சபையையும், அமெரிக்காவையும் கேட்டுள்ளார்.

எம்பிலிப் பிட்டியாவில் அண்மையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் அவர் பேசும் போது, புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிக்க சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுத்துவந்தாலும் வடக்கு-கிழக்கில் ஜனநாயகம் நிலவவில்லை. சமாதானப் பேச்சுக்கள் மட்டுமே போதாது.

எமது அரசாங்கம் கடன்களை வாங்கும் போதும் முன்னணி எமது வளங்களை விற்கும் போதும் ஆசிய அபிவிருத்தி வங்கியினதும் உலக வங்கியினதும் அழுத்தங்களுக்கு அடிபணிய மாட்டது. அவர்களிடமிருந்து பெறப்படும் பணம் பிரயோசனமாகவே பயன்படும் ஆனால். ஐக்கியதேசிய முன்னணி அரசைப்போல அமைச்சர்களின் பொக்கற்றகளை நிரப்ப இந்நிதி பயன்படாது என்றும் நாம் உறுதியளிப்போம்.

உலக வங்கியிடமும், ஆசிய அபிவிருத்தி வங்கியிடமும், மட்டுமே கடன் வாங்க வேண்டும் என்றில்லை வேறு நிறுவனங்களிடமிருந்தும் கடன்களைப் பெறுவோம் இவற்றின் விபரங்களை நாம் பெற்றுள்ளோம் என்றார். (உ-6)

## தேர்தல் சாத்தியப்பாடுகள் குறித்து ஆராய

# ஐரோ. யூனியன் பிரதிநிதிகள் வட– கிழக்கிற்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

தேர்தல் நிலைவரங்கள் தொடர்பாக ஆராய்வதற்காக ஐரோப்பிய யூனியனைச்சேர்ந்த பிரதிநிதிகள் குழு ஒன்று வடக்கு- கிழக்குப் பகுதிகளுக்கு விஜயம் செய்யவுள்ளது.

அடுத்த வாரமளவில் வடக்கிழக்கிற்கு விஜயம் செய்யும் இக்குழு, நீதியானதும், அமைதியானதுமான தேர்தலை நடத்துவதற்குரிய சாத்தியக்கூறுகள் குறித்து விரிவாக ஆராயவுள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி இலங்கையின் 13ஆவது நாடாளுமன்றப் பொதுத்தேர்தல் நடாத்தப்படவுள்ளது. இதில் ஒன்றை ஒன்று நிராகரிக்கும் கொள்கைகளையுடைய பல கட்சிகள் போட்டியிடுகின்றன.

அத்துடன், இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேச வாழ் மக்கள் வாக்களிப்பது குறித்து குழப்பங்களும் தோன்றியுள்ளன. இந்த நிலையில் இங்கு வரவுள்ள மேற்படி குழு தேர்தல் வன்முறைகளைக் கட்டுப்படுத்தல், கண்காணித்தல் போன்ற பல விடயங்கள் குறித்து ஆராயவுள்ளது.

இதற்காக இக்குழுவினர் யாழ்ப்பாணம், திருகோணமலை, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, அம்பாறை போன்ற மாவட்டங்களுக்கு விஜயம் செய்து மக்கள் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ-64,4)

## இராசிபலன்

**06. 03. 2004**

**(மாசி 23, சனிக்கிழமை)**

| | | |
|---|---|---|
| **பூரணை** | **பின்னிரவு 5.49** | **மணிவரை** |
| **மகம்** | **நண்பகல் 12.26** | **மணிவரை** |
| **இராகுகாலம்** | **9.25-10.55** | **மணிவரை** |
| **சுபநேரம்** | **3.25-4.55** | **மணிவரை** |

### பூரணை விரதம்

**மேடம்**
**சொத்துக்களால் கவலை, எடுத்தகாரியம் தாமதமாகும், பணக்குறைவு, உடல் நலக் குறைவு.**

**இடபம்**
**புதிய விடயம், முயற்சி தாமதம், தொழில் கஷ்டம், பிரயாணம்.**

**மிதுனம்**
**கூட்டுமுயற்சி, சகோதரர் உதவி, அதிக வருவாய், கீர்த்தி.**

**கடகம்**
**விவாதம், காரிய தாமதம், பிறர்ஒத்துழைப்பின்மை, அதிக பிரயாசை.**

**சிங்கம**
**புண்ணிய கருமம், விருந்துபசாரம், புதிய திட்டமிடல், முயற்சி கைகூடும்.**

**கன்னி**
**இ[illegible] மாற்றம், மனச்சஞ்சலம், சுபலசெலவு, கா[illegible]ய தாமதம்.**

**துலாம்**
**கீர்த்தி, தனலாபம், நல்ல கருமங்கள், அறிஞர் சந்திப்பு.**

**விருச்சிகம்**
**அதிக பிரயாசை, பிறர் உதவி, நல்ல செய்தி, புதியவிடயம்,**

**தனுசு**
**கட்டுப்பாடு, பிதாவழி உறவு, காரிய தாமதம், பிரயாணம்.**

**மகரம்**
**எதிர்பாராத பிரச்சினை, ஆரோக்கியக் குறைவு, வாகன பயம், துன்பம்.**

**கும்பம**
**நல்லவரவேற்பு, காரிய சித்தி, தொழிலில் ஆர்வம், தனவரவு.**

**மீனம்**
**கௌரவமான நிலை, தொழில் சிந்தை, நண்பர்கள் சந்திப்பு, காரிய சித்தி.**

**(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)**
**- வளவன்.**

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி முதற்கட்டமாக வழங்கப்படவுள்ளது.

இந்த வகையில், எதிர்வரும் 9ஆம் திகதி அரியாலை சரஸ்வதி ச.ச.நிலையம், காந்தி ச.ச.நிலையம், திருமகள் ச.ச. நிலையம் ஆகியவற்றிலும், 10ஆம் திகதி நாயன்மார்கட்டு ச.ச. நிலையம், நாயன்மார்க்கட்டு சித்தமருத்துவமனை, கலைவாணி ச.ச.நிலையம் ஆகியவற்றிலும் 11ஆம்திகதி பென்ரிகோஸ்ரல் சேர்ச், சென். பெனடிக்ற் வித்தியாலய்ம் ஆகியவற்றிலும் வைத்து தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

அத்துடன், எதிர்வரும் 11ஆம்திகதி நாவாந்துறை முத்தமிழ் பாலர் பாடசாலையிலும், 16ஆம் திகதி சன்மார்க்க ச.ச.நிலையம், கொட்டடி ச.ச. நிலையம், மிருக வைத்திய நிலையம் ஆகியவற்றிலும் 17ஆம்திகதி அண்ணா ச.ச. நிலையம், சென் நீக்கிளஸ் ச.ச.நிலையம், அறவொளி ச.ச.நிலையம் ஆகியவற்றிலும், 18ஆம் திகதி பேதுறு பாலர் பாடசாலை, நாவலர் கலாசார மண்டபம், ஓ.எல். ஆர். பாடசாலைக்கு அருகாமை ஆகியவற்றிலும் வைத்து தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

எனவே, இச்சந்தர்ப்பத்தில் வளர்ப்பு நாய்களுக்குத் தவறாது இவ் விலங்கு விசர் நோய்த் தடுப்பூசியை ஏற்றிக்கொள்ளுமாறு யாழ்ப்பாணம் மாநகரசபையின் சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி ம.மரியதாசன் அறிவித்துள்ளார். (உ-18)

## சம்பள முரண்பாட்டை நீக்கக்கோரி மாபெரும் மறியல் போராட்டம்

(கொழும்பு)

அரசாங்க சேவையில் நிலவும் ஊழியர்களின் சம்பள முரண்பாடுகளைத் தீர்க்கக்கோரி அரச பொதுச் சேவைத் தொழிற்சங்கங்களின் சம்மேளனம் எதிர்வரும் 11ஆம்திகதி பொது நிர்வாக அமைச்சின் முன்பாக ஒருநாள் மாபெரும் வேலை நிறுத்த மறியல் போராட்டத்தில் ஈடுபடவுள்ளது.

அரசாங்க சேவைகளில் நிலவிவரும் சம்பள முரண்பாடுகளைத் தீர்த்து வைக்கக்கோரி பல தரப்பட்டோராலும் அரசாங்கத்திற்கு அழுத்தங்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன.

ஆயினும், அரசாங்க சேவை ஊழியர்களின் சம்பள முரண்பாடுகள் இதுவரை தீர்த்து வைக்கப் படவில்லை.

இதனையடுத்தே, அரசாங்க சேவைத் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளும் உறுப்பினர்களும் ஒன்றிணைந்து ஒரு நாள்வேலை நிறுத்தத்தை மேற்கொள்ளவுள்ளதுடன்,

பொது நிர்வாக அமைச்சின் முன்னால் அன்றைய தினம் மறியல் போராட்டத்தில் ஈடுபடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-18)

# நைஜீரியாவுக்கு அணுவாயுதம் வழங்க பாகிஸ்தான் அரசாங்கம் முன்வந்தது

(அபுஜா)

அணுவாயுதங்களைத் தயாரித்துக கைவசம் வைத்துள்ள பாகிஸதான் அதை நைஜீரியாவுக்கும் வழங்க முன்வந்துள்ளது என்று நைஜீரய நாட்டின் பாதுகாப்பு அமைசசகம் கடந்த புதன்கிழமை வெளியிட்ட அறிக்கையில் இருந்து தெரிகின்றது.

பாகிஸ்தான் இராணுவத்தின் கூட்டுத் தலைமைத் தளபதி ஜெனரல் முகம்மது அஜீஸ்கான் சமீபத்தில் நைஜீரியாவுக்கு சென்றிருந்தார். அப்போது நைஜீரியப் பாதுகாப்பு அமைச்சர் ரபியுகுவாங்வசோவைச் சந்தித்தார். நைஜீரிய இராணுவத்திற்குத் தேவைப்படும் ஆயுதங்கள், கருவிகள், தளபாடங்கள், போர்ப் பயிற்சி ஆகியவற்றை வழங்கத் தங்கள் நாடு தயாராக இருககிறது என்று குவாங்வ சோவிடம் தெரிவித்தாராம்.

தேவையென்றால் அணுவாயுத உதவியைக் கூடச் செய்யத் தயார் என்று அஜீஸ்கான் கூறினாராம். அணுவாயுதங்கள் பொருத்தப்பட்ட ஏவுகணைகளையும் தாங்கள் தயாரித்து வைத்திருப்பதாகவும், தங்களுடைய அயல்நாட்டின் இராணுவ அச்சுறுத்தல் காரணமாகவே இத்தகைய தயாரிப்புகளில் ஈடுபட்டிருப்பதாகவும் கான் குறிப்பிட்டார்.

பாகிஸ்தான்இராணுவ வீரர்களுக்குத் தீவிரப்பயிற்சிவழங்க நைஜீரியா தயார் என்று அந்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சர் பதிலுக்குக் குறிப்பிட்டார்.

ஏவுகணைத் தொழில் நுட்பத்தை வழங்க வடகொரியா தயாராக இருக்கிறது என்று நைஜீரியாவின் துணை அதிபர் அறிவித்த 2மாதங்களுக்குப் பிறகு இச்செய்தி வெளியாகியிருக்கின்றது. அப்படி ஏவுகணைத் தொழில்நுட்பத்தை விற்பதாகத் தாங்கள் எப்போதும் கூறியதில்லை என்று வடகொரியா பின்னர் மறுத்துவிட்டது.

அதிபர் ஒலுசெகன் ஒபசாஞ்சோ சார்பில் அதிகாரி ஒருவரும் இதை மறுத்திருக்கின்றார். இச் செய்தியைப் பாகிஸ்தானும் மறுக்கிறதா என்று பொறுத்திருந்து பார்க்கவேண்டும். (து-9)

# குறுகிய கால அறிவிப்பில் மலேசியாவில் பொதுத் தேர்தல்

(கோலாலம்பூர்)

மலேசியப் பொதுத் தேர்தல் எதிர்வரும்21 ஆம் திகதி நடை பெறும் என்று அந்நாட்டின் பிரதமர் அபதுல்லா அஹமட் பதாபி தெரிவித்துள்ளார்.

மலேசியப் பாராளுமன்றம் நேற்று முன்தினம் கலைக்கப்பட்டதையடுத்து, அந்நாட்டின் தேர்தல் ஆணைக குழு இம்மாதம் 21 ஆம் திகதி பொதுத்தேர்தலை நடத்தத் தீர்மானித்துள்ளது.

இதன்படி, 20 நாட்களுக்குள் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்படுவதுடன், கட்சிகளின பிரசார நடவடிக்கைகளையும் வாக்களிப்பு மற்றும் முடிவுகளை வெளியிடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விடுமுறைகளின் பின் பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிப்பதற்கு முன் சகல தேர்தல் நடவடிக்கைகளும் நிறைவு செய்யப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

219 ஆசனங்களைக் கொண்ட மலேசியப் பாராளுமன்றத் தேர்லுக்காக 10 மில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் வாக்களிக்கவுள்ளதாகவும் தேர்தல்கள் சுதந்திரமாக நடைபெறுவதற்குப் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பிரதமர் அப்துல்லா அஹமட் பதாபி மேலும் தெரிவித்துள்ளார். (து-9)

# புட்டின் அமைச்சரவையில் அடிக்கடி மாற்றம்

(மொஸ்கோ)

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடடின், பிரதமர் நியமனத்தில் அதிரடி நடவடிககை மேற்கொண்டதை அடுதது அந்நாட்டின அமைச்சரவை அவரது கைப்பொமமையாகச் செயற்படுவதாக விமர்சனம் எழுந்துள்ளது.

அமைச்சரவையின் 3 முக்கிய அமைச்சர்களை பதவி நீக்கம் செய்ததுடன் பிரதமரையும் புட் டின் பதவிநீக்கம் செய்திருந்தார்.

இதனையடுத்து பாராளுமன்ற செயற்பாடுகளிலும் அமைச்சரவைச் செயற்பாடுகளிலும் புதிய அமைச்சர்களை உள்வாங்குவதிலும பழையவர்களை வெளியேற்றுவதிலும் விளாடிமிர் புட்டின் ஈடுபட்டுளளார். (து-9)



ஈராக்கின் புனித நகரமான கர்பலாவில் கடந்த செவ்வாய்க் கிழமை மொஹரத்தை ஒட்டி ஷியா முஸ்லிம்கள் கூடியிருந்தபோது அடுத்தடுத்து வெடித்த குண்டுகளால் உடல் சிதைந்து தூக்கியெறியப்பட்டுக் கிடக்கும் சடலங்களுக்கு மத்தியில், உயிர் பிழைக்க ஓடுகிறார் ஓர் இளைஞர்.

# மதச் சின்னங்களை மாணவர்கள் அணிந்து வர பிரான்ஸில் தடை

(பாரிஸ்)

தலைப்பாகை உள்ளிட்ட மத அடையாளச் சின்னங்களை அரச பள்ளிகளில் யூத, சீக்கிய மாணவ, மாணவியர் அணிந்து வருவதற்குத் தடை விதிப்பதற்கான சட்டம் பிரான்ஸ் நாடாளுமன்றத்தின் இரு சபைகளிலும் நிறைவேற்றப்படுள்ளது.

இது பிரான்ஸ் வாழ் இஸ்லாமியர்கள் மற்றும் சீக்கியர்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

இந்தச் சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து அங்கு போராட்டங்களும் நடைபெற்றுள்ளன.

கொண்டு வரப்பட்டுள்ள மத அடையாளத் தடைச் சட்டத்துக்கு அந்நாட்டு நாடாளுமன்ற கீழ் சபை சில வாரங்களுக்கு முன் ஒப்புதல் அளித்ததும், இதைத் தொடர்ந்து செனட் உறுப்பினர்களும் தடைச்சட்டத்தை நிறைவேற்ற ஆதரவு தெரிவித்து வாக்களித்ததும் குறிப்பிடத்தக்கது.

அரச பள்ளிகளில் மத அடையாளங களைச் சின்னங்களை அணிவதை தடைசெய்வதற்கான இந்தச் சட்டம தறபோது நடை முறைக்கு வந்துள்ளது.

இந்தச் சட்டம் மத அடிப்படையிலான பிரிவினையை ஏற்படுத்தும் நோக்கம் கொண்டது அல்ல என்று பிரான்ஸ் பிரதமர் விளக்கமளித்துள்ளார். (து-9)

# ஈராக் தாக்குதல் சம்பவங்களுக்கு அமெ.இராணுவமே பொறுப்பு

## லெபனான் குற்றச்சாட்டு

(பெய்ரூட்)

ஈராக்கில் இடம்பெற்ற ஷியா முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதலுக்கு அமெரிக்க இராணுவத்தினரே பொறுப்பு என்று லெபனான் குற்றஞ்சாட்டியுளளது.

அமெரிக்கப் படைகள் பாதுகாப்பு நோக்கங்களுக்காக ஈராக்கில் நிறுததப்பட்டிருந் தாலும், அந்நாட்டுக் கலாசார நடைமுறைகள், பிரதான குழுக்களின் நிலைமைகள குறித்து தெளிவற்ற நிலையிலேயே இருப்பதாக லெபனான் சுட்டிக் காட்டியுள்ளது.

உள்நாட்டின் பிரசசினைகளை இனங்காண முடியாத பிரித்தானியா, கனடா, அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளின் படைகளினால் ஈராக்கிற்குப் பாதுகாப்பு வழங்க முடியாது என்று லெபனான் கூறியுள்ளது.

இதன் காரணமாக அவர்கள் தமது படைகளை அங்கிருந்து வாபஸ் பெற்று அந்நாட்டு மக்களிடமே அதிகாரத்தைக் கையளிப்பதுதான் பொருத்தமான நடைமுறை எனறும் லெபனான் தெரிவித்துள்ளது. (து-9)



ஈராக்கில் அமெரிக்கப் படையினர் நடததிய தாக்குதலில் தனது குடும்பத்தினர் 5 பேரை இழந்த இந்தப் பெண் தற்போது வாஷிங்டனில் இருக்கிறாள். தனது செல்லப் பிராணியான நாய்க்கு சிகிச்சை அளிப்பதற்காக வாஷிங்டனில் உள்ள மருத்துவமனைக்கு வந்த காட்சி.



மொஹரம் பண்டிகையையொட்டி சென்னையில் ஷியா முஸ்லிம்கள் தங்களைத் தாங்களே அடித் துக் கொண்டு சென் ற பேரணி.

# மியன்மாரை ஜனநாயகப் பாதையில் நகர்த்த பிரதமர் மியன் உறுதி

(யாங்கூன்)

மியன்மாரை ஜனநாயக அடிப்படையில் கொண்டு நடத்தப் போவதாக அந்த நாட்டின் பிரதமர் ஹின் மியன் உறுதியளித்துள்ளார்.

எதிர்கட்சித் தலைவி ஆங்சான் சூகியும் பிரதமரின் இந்தப் புதிய திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்க விருப்பதாக ஐக்கிய நாடுகளின் விசேட பிரதிநிதி ரஸால் இஸ்மைல் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ஹின்மியன் இந்த உறுதியையளித்திருப்பதாக ஐக்கிய நாடுகளின் பிரதிநிதி ஒருவர் உறுதி செய்துள்ளார்.

மியன்மாருக்கான 4 நாள் விஜயத்தை முடித்துக் கொண்டு கோலாலம்பூர் திரும்பியுள்ள ஐக்கிய நாடுகளின் மேற்படி விசேட பிரதிநிதி ரஸாலி ஊடகவியலாளர்களுக்கு தவல் தருகையில் இந்த விடயத்தைத் தெளிவுபடுத்தியுள்ளார். (து-9)

# அணுவாயுத உற்பத்தித் திட்டங்களை ஈரான் தொடர்ந்தும் மறைக்கின்றது

## அமெரிக்கா மீண்டும் குற்றச்சாட்டு

(வாஷிங்டன்)

அணுவாயுத உற்பத்தித் திட்டங்களை ஈரான் மறைத்து வருவதாக அமெரிக்கா மீண்டும் குற்றஞ்சாட்டியுள்ளது.

ஈரானின் இந்த நடவடிக்கைக்கு எதிராக சர்வதேச நாடுகள் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று அமெரிக்க நிர்வாக உயரதிகாரி ஒருவர் நேற்று முன்தினம் கருத்துத் தெரிவித்துள்ளார்.

ஈரான் அதன் அணுவாயுதத் திட்டம் பற்றி தெளிவுபடுத்த வேண்டும என்று அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள், சர்வதேச அணு உற்பத்தி பாதுகாப்பு முகவர் நிலையம் ஆகியன அழுத்தம் கொடுகக வேண்டுமென்று அமெரிக்காவின் சர்வதேசப் பாதுகாப்பு மற்றும் ஆயுதக் கட்டுப்பாட்டுச் செயலாளர் ஜோன் போல்ட்ரன் வேண்டுகோள் விடுத்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஈரானுக்கு இது தொடர்பாக கொடுக்கப்படும் அழுத்தங்களை எக்காரணம் கொண்டும் குறைக்கப் போவதில்லை என்று அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கின்றார். (து-9)

# யாழ். மாவட்டத்தை கட்டியெழுப்புவது குறித்த கூட்டங்கள், திட்டங்களினால் எந்தப் பயனும் எட்டப்படவில்லை

## அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய மாதாந்த அறிக்கையில் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

**யுத்தத்தினால் அழிக்கப்பட்ட யாழ்ப்பாண மாவட்டத்தை மீளவும் கட்டியெழுப்புவது தொடர்பாக உள்நாட்டு மற்றும் சர்வதேச மட்ட அமைப்புக்களுடன் பல கூட்டங்கள் நடாத்தப்பட்டு பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்ட போதிலும் கூட, இணக்கப்பாடான காரியங்கள் எதுவும் இதுவரை இடம்பெறவில்லை. யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் பின் துப்பாக்கிகள் மௌனித்து, எறிகணைகள், குண்டு வீச்சுக்கள் இடம்பெறவில்லை என்பதை விடவேறு எதுவும் யாழ்ப்பாண மக்களுக்கு ஆக்கபு,ர்வமாக நிகழவில்லை.**

இவ்வாறு யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தினால் வெளியிடப்பட்ட தை மாத நிலைவர அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இணையத்தின் தலைவர் வீ.ஸ்ரீசக்திவேலின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ள இவ் அறிக்கையின் பிரதிகள், வெளிநாட்டு தூதுவராலயங்கள் மற்றும் தேசிய மட்ட சமாதான, அபிவிருத்தி நிறுவனங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

அவ அறிக்கையில் மேலும் குறிபபிடப்பட்டுள்ளதாவது, தென்னிலங்கையிலுள்ள வர்த்தக நிறுவனங்களுக்கு யாழ்ப்பாணம மிகவும் வசதியான ஒரு வர்த்தகப் பிராந்தியமாக அமைந்துள்ளது. தென்னிலங்கையின் வர்த்தகப் பொருள்கள் மிகவும் ஏரளமாக இங்கு கொண்டு வரப்படுகின்றன. அவ்வகையில் யாழ்ப்பாணத்தில் பொருளாதாரக் குடியேற்றம் இடம்பெற்று வருகின்றது.

அரசியல் ரீதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஜே.வி.பி.யும் கூட்டிணைந்ததன் காரணமாக, தமிழீழ விடுதலைப் புலிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கான வரைவு ஒட்டுமொத்தமாக நிராகரிக்கப்படக்கூடிய ஏதுநிலை காணப்படுவதுடன், தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வு தூர விலகிப் போய்க்கொண்டிருக்கின்றது என தமிழர்கள் உணர்கின்றனர்.

### *பாதுகாப்பு நிலை*

யாழ்ப்பாண மாவட்டத்துக்கான பிரதான கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில சந்திரபாலா இணையத்துக்கு உத்தியோகபூர்வமான விஜயத்தினை மேற்கொண்டு இணையப் பிரதிநிதிகளுடன் மாவடடப் பாதுகாப்பு நிலவரம் குறித்துக் கலந்துரையாடியுள்ளார். அதன் போது, குடாநாட்டு மக்களின் நாளாந்த வாழ்வியல் நடவடிக்கைகளுக்கு விரோதமாகச் செயல்படும் படையினர் மீது கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என உறுதியளித்திருந்தார்.

பாதுகாப்புப படையினால் பயன்படுத்தப்பட்ட இருபது வீடுகளையும் தென்னந்தோட்டங்களையும் மட்டுவில் பகுதியில் மீளவும் அவற்றின் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

### *கண்ணி வெடி*

யாழ்ப்பாணம் அரச செயலகத்தில் இயக்கும் மிதிவெடிகள் அகற்றும் இணைப்புக்குழு இவ்வருடத்தில் மிதிவெடிகள் அகற்றப்படவேண்டிய 100 இடங்களைத் தெரிவு செய்துள்ளது. இவவகையில் 6 ஆயிரத்து 943 தனிநபர் எதிர்ப்பு மிதிவெடிகளையும். 5 ஆயிரத்து 130 வெடிக் கத்தக்க பொருட்களையும் 440 வெடிமருந்துகளையும் மிதிவெடிகள் அகற்றும் முகவர்கள் 2003 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 3 லட்சத்து 76 ஆயிரத்து ஒன்பது சதுர மீற்றர் பகுதியில் அகற்றியுள் ளனர்.

இதே சமயம் யாழ்ப்பாணத்திலுள்ள உடல் ஊனமுற்றோர் சங்கத்தின் அறிக்கைகளின் பிரகாரம் கடந்த வருடம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில 54 பேர் மிதிவெடிகள காரணமாக காயமடைந்து பாதிப்படைந்துள்ளனர். இவர்களில் 14 பேர் மாணவர்கள் எனவும் 32 பேர் 30 வயதுக்குட்பட்டவர்கள்.

### *சுகாதாரம்*

யாழ்ப்பாணம் அரசினர் போதனா வைத்தியசாலையில் விபத்துப் பிரிவுக்கான விசேட கவனிப்பு பிரிவு ஒன்றினை அமைப்பதற்கு சுகாதார அமைச்சு 90 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

யாழ்.மாவட்ட சுகாதார உதவி அத்தியட்சகரின் கூற்றுப்பிரகாரம் யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த வருடம் 377 பேர் சராசரி மலேரியா நோயினாலும் 33 பேர் மூளை மலேரியாவினாலும் பாதிக்கப்பட்டனர். இருப்பினும் 2002 ஆம் ஆண்டு காலப்பகுதியுடன் ஒப்பிடும் போது கடந்த வருடம் இந் நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் தொகை மிகவும் குறைவாகவுள்ளது எனவும் தெரியவருகின்றது.

### *விவசாயம்*

கடந்த வருடம் யாழ்ப்பாண மாவட்டத்தில் மழை வீழ்ச்சி மிகவும் குறைவாக இருந்தமையினால் பெரும் போக நெல் விளைச்சல் மிகவும் குறைவாகவிருந்துள்ளது. இதனால், விவசாயிகள் பெரும் நஷ்டத்தினை எதிர்நோக்கியிருந்தனர் என்று அவ் அறிகசையில் குறிப்பப்பட்டுள்ளது.

(உ-16)

---

## தி.மு.க.வில் இருந்து ஆலடி அருணா இடை நீக்கம் கட்சிக் கட்டுப்பாட்டை மீறியதாகக் குற்றச்சாட்டு

(புதுடில்லி)

வரும் மக்களவைத் தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்யப் போவதாக தி.மு.க.வின் முக்கிய தலைவர்களில் ஒருவரான ஆலடி அருணா தெரிவித்திருக்கிறார்.

நேற்று முன்தினம் புதுடில்லியில் துணைப்பிதமர் அத்வானியையும், பா.ஜ.க தலைவர் வெங்கைய நாயுடுவையும் அவர் சந்தித்துப் பேசினார்.

இதைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், தேசிய ஜனநாயக் கூட்டணியை, குறிப்பாக பாஜக.வை ஆதரித்துப் பிரசாரம் செய்வது என்ற தமது முடிவு நிலையானது என்றார்

தேச பகதியுள்ள, தன்மானமுள்ள எந்த இந்தியக் குடிமகனும் வெளிநாட்டைச் சேர்ந்த ஒருவரை இந்தியப் பிரதமராக ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்றார்.

சோனியா காந்தியின் தலைமையேற்று கொள்ளப்பட்டால் இந்தியாவில் தலைவர்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு விட்டது என்று சர்வதேச அளவில் முடிவுக்கு வர நேரிடும் என்றார் அவர்.

இது போன்ற உங்களது முடிவுக்கு எதிராகக் கட்சி நடவடிக்கை எடுக்குமா என்று கேட்டதற்கு கட்சியின் கட்டுப்பாட்டை விட நாட்டையே தான் அதிகமாக நேசிபபதாகக் கூறினார்.

இதனிடையே கட்சி விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்காக ஆலடி அருணா தி.மு.க.வில் இருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளதாகக கட்சியின் பொதுச் செயலாளாக. அன்பழகன் தெரிவித் துள்ளார்.

சென்னையில் அவர் வெளியிட்டுளள அறிக்கையில் ஆலடி அருணாவின் இந்நடவடிக்கை கட்சியின பெயருக்குக் களங்கம் விளை வித்து விட்டதாகத் தெரிவித்துள்ளார்.(து)

---

## பா.ஜ. கட்சி சரணாகதிக் கூட்டணியா?

## ராதாகிருஷ்ணன் கொதிப்பு

(சென்னை)

தி.மு.க. கூட்டணிக்கு எதிராக வலுவான வியூகத்தை வகுத்திருப்பதாக பா.ஜ.க மாநிலத் தலைவர் ராதாகிருஷணன் கூறியிருக்கிறார்.

சென்னையில் செய்தியாளர்களிடம பேசிய அவர், அ.இ.அ.தி.மு.க-பா.ஜ.க. கூட்டணியைக் சரணாகதிக் கூட்டணி என்று விமர்சனம் செய்ய தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கு எந்த விதமான தார்மீக உரிமையும் கிடையாது என்றார்.

எல்.ரி.ரி.ஈ.க்கு ம.தி.மு.க தலைவர் அளித்துவரும் ஆதரவை, ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோ. திரும்பப் பெறவேண்டும் என்றும் அவர் கூறினார்.

"அவர்கள் ஒரு கூட்டணி அமைத்தால் அதற்குப் பெயர் இராஜதந்திரம் என்பதும், அதற்கெதிரான பலமான ஒரு வியூகத்தை நாங்கள் அமைத்துவிட்ட காரணத்தால் எங்களைக் சரணாகதிக் கூட்டணி என்று கூறுவதும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவருக்கு வேண்டுமானால் ஓர் அருமையான கருத்தாக இருக்கலாம்; மக்கள் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறார்கள் என்று ராதாகிருஷணன் மேலும் தெரிவித்தார்.

(து)

---

## அத்வானியின் ரத யாத்திரையில் தலையிட முடியாது- தேர்தல் தலைமை ஆணையர்

(பெங்களூர்)

துணைப் பிரதமர் எல்.கே. அத்வானியின் 'பாரத் உதய்' யாத்திரையில் தலையிட முடியாது என்று தேர்தல் தலைமை ஆணையர் ரி.எஸ். கிருஷ்ணமூர்த்தி தெரிவித்திருக்கிறார்.

நேற்று முன்தினம் பெங்களூரில் பேசிய அவர் இந்த விடயத்தில் சட்டம் ஏதாவது இருக்குமானால் இதற்கு எதிராத மாநிலக் காவல் துறைதான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறினார்.

ஜனநாயகத்தில் அரசில் கட்சிகள் பேரணிகள் நடத்துவது அனுமதிக்கப்படுவதைக் கிருஷ்ணமூர்த்தி சுட்டிக்காட்டினார்.

இந்த யாத்திரையை மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் அடிப்படையிலேயே தேர்தல் ஆணையம் பார்க்கிறது என்று தெரிவித்த தலைமை ஆணையர், இந்தச் சட்டதையும் இந்திய குற்றவியல் சட்டதையும் மீறினால் அது குறித்து காவல்துறையினர் முன் கொண்டு செல்லப்படுமென்றார். (து)

**இந்தியச் செய்திகள்**

---

## "இந்தியா ஒளிர்கிறது" என்பதை நம்ப முடியாது-வை.கோ

(சென்னை)

பாரதிய ஜனதாக் கட்சி மற்றும் அ.இ.அ.தி.மு.க. அரசுகளினால் மதச் சார்பின்மைக்கும் ஜனநாயகத்துக்கும் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்களை வரும் மக்களவைத் தேர்தலில் முன்னிலைப் படுத்தித் தேர்தல் பிரசாரம் செய்ய விருப்பதாக ம.தி.மு.க பொதுச் செயலாளர் வை.கோ. கூறியிருக்கிறார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் பொதுத் திடடத்திலிருந்து பா.ஜ.க. விலகிச் செலலாமல் தடுத்து விடலாம் என்ற நம்பிக்கையில் அரசில் தமது கட்சி இடம்பெற்றதாகவும், ஆனால் அநத முயற்சி தோல்வியடைந்ததால அநதக் கூட்டணியிலிருந்து ம.தி.மு.க. வெளியேறியதாகவும் கூறினார்.

வருங் காலத்தில் பா.ஜ.க தலைமையிலான எந்தக் கூட்டணியிலும் ம.தி.மு.க. மீண்டும் சேராது என்று வை.கோ. உறுதிபடக் கூறினார். துணைப்பிரதமர் அத்வானியின் ரத யாத்திரை நாட்டில்பல பிரச்சினைகளை ஏற்படுததும் என்று கூறினர். இந்தியா ஒளிர்கிறது என்பதைத் தன்னால்நம்ப முடியவில்லை என்று கூறிய வை.கோ ஏராளமான கரும் புள்ளிகள் இருக்கும் போது எவ்வாறு ஒளிர முடியும் என்று வினாவினார். (து)

---

## மக்கள் ஆதரவு என் பக்கமே! சோனியா காந்தி அறிவிப்பு

(சென்னை)

தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசில் முறைகேடுகள் மலிந்து விட்டன என்றும், இதைவரும் மக்களவைத் தேர்தல் பிரசாரத்தில் காங்கிரஸ் முன்னிலைப்படுத்து மென்றும் கட்சியின் தலைவர் சோனியா காந்தி கூறியிருக்கிறார்.

ஹிமாலயப் பிரதேசத்தில் தேர்தல பிரசாரத்தில் ஈடுபட்டுளள அவர் மண்டியில் செய்தியாளர்களிடம் பேசினார்.

அத்வானியின் 'பாரத் உதய்' யாத்திரையில் புதிதாக ஒன்றும் இல்லையென்றும், ஒரு பெண்ணைப் பார்த்து பா.ஜ.க அச்சம் கொண்டுள்ளது என்பதையே இது காட்டுகிறது என்றும் சோனியா காந்தி கூறியிருக்கிறார்.

தாம் மேற்கொண்டுள்ள தேர்தல் பிரசார்த்துக்கு மக்களிடம் பேராதரவு இருப்பதாகவும், செல்லும் இடங்களிலெல்லாம் மக்கள் தன்னை அனபோடு வரவேற்பதாகவும் அவர் கூறினார்.

உத்தரப் பிரதேசத்தில் பகுஜன் கட்சியுடனும் சமாஜவாதக் கட்சியுடனும கூட்டணி அமைத்துக்கொள்ள காங்கிரஸ் தயங்க வில்லை எனக் குறப்பிட்ட அவர், கூட்டணி ஏற்படா விட்டால் தேர்தலைத் தனியாகச் சந்திகக்வும் தயார் என்றும் தெரிவித்தார். (து)

# தேசவழமை

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
**சி.பத்மநாதன்**
பேராதனைப் பல்கலைக்கழகம்.

65

## மூன்றாம் பகுதி
## திருகோணமலைத் தமிழரின் வழமைகள்

### 1.திருகோணமலை வன்னியரும் கோணேசர் கோயில் வழமைகளும்

கண்டியரசன் கி.பி 1611 ஆம் ஆண்டிலிலே போர்த்துக்கேயருக்கு எதிரான போர் ஆயத்தங்களை மேற்கொண்டபொழுது, அதனை உற்று இராசப் பிரதானிகள் சபையின் கூட்டம் ஒன்றைக் கூட்டினான். அதிலே, கொட்டியாரம்பற்று வன்னிபமான இடலி, பழுகாமத்துச் செல்லபண்டாரம், மட்டக்களப்புக் குமார பண்டாரம், போரதியதீவுக்கதிபதிபனாகிய சண்முகசங்கரி முதலான வன்னிபங்களும் பிரசன்னமாயிருந்தனர். அடுத்த வருஷமாகிய 1612 இல் கொட்டியாரத்து வன்னியன் கண்டி மன்னனுக்கெதிராகக் கிளர்ச்சி ஒன்றை ஏற்படுத்தும் சூழ்ச்சித் திட்டத்திலே பங்கு கொண்டான் என்று அவன் மேற்குற்றம் சுமத்தப்பட்டது. அதன் காரணமாக,கண்டிக்குப் போய் அரச சபையிலே பிரசன்னமாகுமாறு அவனுக்கு அரசன் கட்டளையிட்டான். வன்னிபமான 'இடலி' நோய்வாய்ப்பட்டு இருந்தமையால் தன்னை அழைத்தமைக்கான காரணங்களை அறிவதற்கு தன் மருமகனை இராசாதானிக்கு அனுப்பி வைத்தான். இதன் பிரதிபலனாகக் கொட்டியாரத்து வன்னிபம் அரசனுடைய விசுவாசத்தை மீண்டும் பெற்றுக்கொண்டான்.

1613ஆம் ஆண்டிலே கண்டியில் அரசன் நோயுற்றிருந்து, தான் இறக்க நேரிடும் என்ற எண்ணம் ஏற்பட்டதனால், தனது வாரிசாக இளவரசனை நியமிப்பதற்கும் அரச பரிபாலனத்தை நடாத்துவதற்கும் ஒரு குழுவினை நியமிப்பதற்கு இராசப் பிரதானிகள் சபையினைக் கூட்டினான். அச் சபையின் முடிபுகளைத் தெரிவிப்பதற்கென இளவரசனை அழைத்துவரும் பொறுப்பினை கொட்டியாரத்து வன்னிபத்திடம் அரசன் ஒப்படைத்தான்.

இரண்டாம் இராஜசிங்கனின் காலத்தில் இளஞ்சிங்கம் என்பவன் கொட்டியாரம்பற்று வன்னிபமாக விங்கினான் என்பதை வீரக்கோன் முதலியார் பாடிய சித்திரவேலாயுதர் காதல் மூலம் அறிய முடிகின்றது. இப்பனுவலில் மேல் வரும் அடிகள் உள்ளன.

"துன்னு மிருமரபுரந் துய்யவிளஞ் சிங்கமெனும்
வன்னிமைப் பொற்றபாதம் வணங்கையினீ சொல்லாதை
மின்னுமெழில் மண்டபத்தில் வீற்றிருக்கும் வேளையிலே
கோதில் புகழ் சேர் வீரக்கோன் முதலி தானியற்றுங்
காதலரங் கேற்றுகையிற் காதறனைச் சொல்லாதை"

இளஞ்சிங்க வன்னிபத்தின் தலைமையிலே, சித்திரவேலாயுத சுவாமி. கோயில் மண்டபத்திலே, தேசத்தவர் கூடியிருந்த மகாநாட்டிலே, வீரக்கோன் முதலியார் பாடிய பிரபந்தம் அரங்கேற்றப்பட்டது. என்பது இவற்றாலே தெளிவாகின்றது. இவற்றிலே காணப்படும் வன்னிமை, தேசத்தார், மகாநாடு என்னும் சொற்கள் கவனித்தற்குரியவை. வன்னிப் பகுதி ஒன்றைத் தேசம் என்று குறிப்பிடுவதும், அப் பகுதியைச் சேர்ந்தவர்கள் கூடுகின்ற பொழுது அக்கூட்டத்தை மகாநாடு என்று சொல்வதும், அம் மகாநாட்டுக்கு வன்னிமை தலைமை தாங்குவதும் திருகோணமலைப்பகுதியில் முற்காலங்களில் வழங்கிய தேசவழமை என்பதும் உணரப்படுகின்றது.

**தானத்தார்**

கோணேசர் கோயிலுக்குரிய ஆலய சேவைகள் தொடர்பாகத் தானம், வரிப்பத்து என்னும் இரு பிரிவினரைப்பற்றி கோணேசர் கல்வெட்டு, திரிகோணசலபுராணம் ஆகிய நூல்கள் குறிப்பிடுகின்றன. இப்பிரிவுகளைச் சேர்ந்தவர்களின் முன்னோர்கள் குளக்கோட்டனால் நியமனம் பெற்றவர்கள் என்ற மரபு வழிச் செய்தி இந்நூல்களில் அழுத்தம் பெறுகின்றது. தானத்தாரைப் பற்றியும் கோணேசர் கல்வெட்டு மேல் வருமாறு வர்ணிக்கின்றது.

பரிதிகுலத் துதித்த குளக்கோட்டுராமன் பங்குனி
உத்திரம் பதினைந்தாம் தேதி தன்னில்
வரிசையுடன் சென்று மருங்கூரிலேகி
வளவரின் நல்லோரை மரக்கலத்தில் ஏற்றி
அரிய திருகோணமலை நாதற்கென்றே அன்னகரில்
ஐயாறு குடியும் ஏற்றி
உரிமையிது உங்கள் பரவணியாம் என்றே
உரை செய்தான் சதுர்வேத ஞான மூர்த்தி

இத்தலத்தில் அரன் கயிலை ஆலயத்தில் இயன்ற
அறைதனில் முதல் இருப்பு நாட்டி
நித்தம் வரும் வரவாகும் பொருள்களோடு நிதம்
பூசைச் செலவெழுத நியமஞ் செய்து
அத்தர் முன்னர் ஆலாத்தி நடனமிடல் பன்றி குற்றல்
அதிகப்பட்ட ரனுக்கீதல்
இத்தனையும் தானாத்தார் செய்வீரென்ன
எழுகுடிக்கு இராயப்பட்டம் ஈந்தான் வேந்தன்.

இரவிகுல மன்னனாகிய குளக்கோட்டான், ஆலயத் தொழும்புகளைச் செய்வதற்கென்று ஆசாரசீலரான 30 குடிகளைச் சோழநாட்டு மருங்கூரின் நின்றும் அழைத்து வந்து திருகோணமலையிலே குடியிருத்தினான். அவர்களுக்குரிய பரவணியாட்சியாகிய நிலம் வழங்கினான். களஞ்சியத்தில் உள்ள பொருள்கள் பற்றிய விபரங்களைப் பதிவு செய்தல், தினவரவு செலவுக் கணக்குகளை எழுதிவைத்தல், உற்சவ காலத்தில் ஆலாத்தி எடுத்தல், உபசாரமாக நடனமாடுதல், நெல்லுக்குற்றல், இறைவர் திருமேனிகளைப் பட்டாடைகளினால் அலங்கரித்தல் முதலானவை தானத்தாரின் கடமைகள் என்று திட்டஞ் செய்யப்பட்டிருந்தது.

தானத்தாரில் 7 குடியினருக்கு இராயர் என்னும் பட்டம் வழங்கப்பட்டது. பொன்னவராயன், சிதம்பரராயன், காலிங்கராயன், மகாகொம்பராயன் என்ற பட்டப் பெயர்களையுடைய தானத்தார் பற்றி நூலின் உரை நடைப்பகுதியிற் கூறப்படுகின்றது. ஆலாத்தி எடுத்தல், நடனமாடுதல், பாத்திரங்களை விளக்குதல் முதலிய பணிகளைச் செய்யும் தானத்தார் தொழும்பாளர் குடிகளைச் சேர்ந்தவராவர். சேவை செய்ய வேண்டியவர்களை அடையாளங் கண்டு அவர்களைத் தெரிவு செய்தல், தானத்தாருள் இராஜர் பட்டம் பெற்றவர்களின் பொறுப்பாகும். கோயிலைப்பொறுத்தவரையில் தானத்தார். செய்யவேண்டிய பணிகள் நிர்வாகம் முதலாகப் பலவகையான தொழும்புகளை உள்ளடக்கியனவாகும்.

**வரிப்பத்தார்**

வரிப்பத்தார் என்னும் பிரிவினரைப்பற்றி நான்கு பாடல்கள் கோணேசர் கல்வெட்டில் உள்ளன. அவற்றிலே அவர்களின் பூர்வீகம் பற்றியும் அவர்கள் வழமையாக செய்யும் கடமைகள் பற்றியும் விபரங்கள் உள்ளன. அவர்களின் பூர்வீகம் காரைக்காட்டுடன் தொடர்புடையது; அவர்கள் குளக்கோட்டனால் வரவழைக்கப்பட்டு நியமிக்கப்பட்டவர்கள். கோணேசர் கோயிற் சந்நிதானங்களிலே இறைவர் திருமேனிக்ளை அலங்கரிக்கின்ற பட்டடைகள் முதலான அலங்காரங்களை மாற்றுதல்; பூசைக்கு வேண்டும் இலை, மலர் முதலானவற்றைக் கொய்து வருதல்; விளக்கேற்றுதல்; பாத்திரங்களைவிளக்குதல்; நெல் குற்றுதல்; விறகு சேர்த்தல்; மெழுகுதல்; நடனப்பெண்கள் ஆடும் பொழுது வாத்தியம் இசைத்தல்; பாடுதல்;கொடியேற்றல்; சந்தனம் அரைத்தல்; திருப்பொற சுண்ணம் இடித்தல் முதலானவை வரிப்பத்தாரின் கடமைகள் ஆகும். வரிப்பத்தாருக்குப் பள்ளவெளியில் நெல் வயல்கள் மானிளயமாக வழங்கப்பட்டிருந்தன. அவர்களில் 5 குடியினருக்குப் பண்டாரத்தார் என்னும் பட்டம் வழங்கப்பட்டது.

(தொடரும்)

# செய்தித் துளிகள்

## மீன்பிடிக் கப்பலில் தீ விபத்து

(கொழும்பு)

காலித்துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மீன் பிடிக் கப்பல் ஒன்றில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. வெளிநாடு ஒன்றிற்குச் சொந்தமான இக்கப்பலில் இயந்திரக்கோளாறு காரணமாகவே தீவிபத்து ஏற்பட்டதாக காலித்துறைமுகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவிததுள்ளார்.

இக்கப்பலில் கடமையாற்றிய மாலுமிகள் கடலில் குதித்து உயிர் தப்பியுள்ளனர். (உ-2)

## சுயதொழில் முயற்சி

(நவக்கிரி)

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள சமுர்த்திப் பயனாளிகள் சுய தொழில் முயற்சிகளை மேற்கொள்வதற்கேற்ற இவ்வாண்டுக்குரிய நடவடிக்கைகளை சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகர்த்தர்கள் தற்போது முன்னெடுத்து வருகின்றனர்.

இதன் ஓர் நடவடிக்கையாகத் முட்டைக்கோழிகள், இறைச்சிக் கோழிகள் மற்றும் பசுக்கள் ஆகியன வளர்ப்பதற்கு ஏற்ற பயனாளிகளைத் தெரிவு செய்து, அவர்களின் விபரங்கள் திரட்டப் பட்டு வருகின்றன. (உ-233)

## நிர்வாக சபை தெரிவு

(யாழ்ப்பாணம்)

அண்மையில் இடம்பெற்ற வடபிராந்திய ஆங்கில மருத்துவ வணிகர் மன்றத்தின் பொதுச் சபைக் கூட்டத்தின் போது, மன்றத்தின் புதிய நிர்வாக சபை தொிவு செய்யப்பட்டது.

இதன் புதிய தலைவராக லயன் டாக்டர் கே. இராசரெத்தினமும், செயலாளராக லயன் க.மு. பத்மநாதனும், பொருளாளராக ஆ. சிவபாலனும், உப தலைவராக மா. தவக்குமாரும், உப செயலாளராக எஸ். தேவ சேனாதிபதியும் தெரிவு செய்யப் பட்டுள்ளனர். (உ-18)

## போட்டிப்பரீட்சைகள் ஒத்தி வைப்பு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின், கலாசார அலுவலர் மற்றும் ஆராய்ச்சி அலுவலர் பதவிகளுக்கான போட்டிப் பரீட்சைகள் முறையே இம் மாதம் 13ஆம் 14ஆம் திகதிகளில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்த போதும், தவிர்க்க இயலாத காரணங்களால் இவை எதிர்வரும் ஜுலை மாதத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்படவுள்ள மேற்படி பரீட்சைகள் நடைபெறும் திகதி மற்றும் பரீட்சை நிலையம் போன்ற விபரங்கள் காலக்கிரமத்தில் விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்படும் என இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் சாந்தி திருநாவுக்கரசன் அறிவித்துள்ளார். (உ-18)

## பரீட்சை பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவ பரிபால சபையினரால், இவ்வாண்டில் தரம்-13ல் கல்வி பயிலும் மாணவர்களுக்கு எதிர் வரும் 8, 9ஆம் திகதிகளில் நடாத்தப்படவிருந்த இந்து நாகரிகம் மற்றும் இந்து சமயம் முன்னோடிப் பரீட்சைகள் தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளன.

மேற்படி பரீட்சைகள் எதிர் வரும் 15ஆம்,16ஆம் திகதிகளில் நடைபெறும் என யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-18)

## கௌரவிப்பு நிகழ்வு

(வேலணை)

கடந்த ஆண்டு நடைபெற்ற தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த கிளிநொச்சி கல்வி வலய மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது.

சித்தியடைந்த அனைத்து மாணவர்களுக்கும் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டு, பெறுமதிமிக்க சான்றிதழ்கள் மற்றும் வங்கியில் பணம் வைப்பிலிடப் பட்ட புத்தகங்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் தமிழீழ விடுதலைப்புலிகளின் துணை அரசியல் துறைப் பொறுப்பாளர் சோ.தங்கன், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி. இராசநாயகம், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். அரியரத்தினம் மற்றும் கிளிநொச்சி மகாவித்தியாலய அதிபர் எஸ். யோகநாதன் ஆகியோர் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டனர். (உ-47)

## ஞானச்சுடர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவையினால் வெளியிடப்படும் ஞானச்சுடர் மலரின் மாசிமாத இதழ் வெளிவந்துள்ளது. (உ-18)

## பொதுக்கூட்டம்

(ஊர்காவற்றுறை)

யாழ். மாவட்டத் தாச்சிச் சங்கத்தின் விஷேடப் பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10.00 மணிக்கு கோண்டாவில் நாராயணன் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (உ-75)

## நகைச்சுவை மன்றத் தொடக்க விழா

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை நகைச்சுவை மன்றத் தொடக்க விழாவும், இ.சிறிஸ்கந்தராசாவின் "நகைச்சுவை முத்துக்கள்" நூல் வெளியீட்டுவிழாவும் இன்று சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நகைச்சுவை மன்றத் தலைவரும் பொலிஸ் தலைமையக அத்தியட்சகருமான கே. அரசரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது. (உ-18)

## நீதி நூல் மனனப் போட்டி

(யாழ்ப்பாணம்)

வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீகற்பக விநாயகர் ஆலய சைவ சமய அபிவிருத்திக் கழகம் வருடாந்தம் நடாத்திவரும் நீதி நூல் மனனப்போட்டி மற்றும் செயல்முறைப்போட்டி ஆகியன முறையே இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

நீதிநூல் மனனப்போட்டியில் பல்வேறு பாடசாலைகளைச் சேர்ந்த தரம் -1, தரம்-2 மாணவர்கள் சுமார் 950 பேர் பங்கு பற்றவுள்ளனர்.

அத்துடன் மத்திய பிரிவு மற்றும் மேற்பிரிவு ஆகிய இரு பிரிவுகளாக நடாத்தப்படவுள்ள செயல்முறைப் போட்டிகளான மாலை கட்டுதல், கோலம் போடுதல் மற்றும் தோரணம் பின்னுதல் ஆகியவற்றில் சுமார் 200 மணவர்கள் பங்கு பற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-18)

## ஆன்மீக நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் இன்று சனிக்கிழமை போயாதின ஆன்மீக நிகழ்சிகள் அதிகாலை 5 மணிக்கு நகர சங்கீர்த்தனத்துடன் ஆரம்பமாகி நண்பகல் நாராயண சேவையுடன் நிறைவு பெறவுள்ளன. (உ-18)

# கரபந்தாட்டச் சுற்றுப் போட்டி

# வலிகாமம் வலயப் பாடசாலைகளின் கோட்ட ரீதியான முடிவுகள்

(அளவெட்டி )

வலிகாமம் வலயப் பாடசாலைகளிடையே இடம்பெற்ற கரபந்தாட்ட சுற்றுப்போட்டியில் கோட்ட ரீதியாக முதல மூன்று இடங்களையும் பெற்ற பாடசாலைகளின் விபரம் வருமாறு:

**தெல்லிப்பழைக்கோட்டம்**

**15 வயதின் கீழ் (ஆண்கள்)**

1ம இடம் யா/அருணோதயக் கல்லூரி.
2ம் இடம்: யா/மகாஜனக் கல்லூரி.
3ம் இடம்: யா/வயாவிளான் மத்திய மகாவித்தி.

**17 வயதின் கீழ் (ஆண்கள்)**

1ம் இடம்: மெய்கண்டான் மகா வித்தி.
2ம் இடம்: அருணோதயக் கல்லூரி
3ம் இடம்: மகாஜனக் கல்லூரி

**19 வயதின் கீழ் (ஆண்கள்)**

1ம் இடம்: மகாஜனக் கல்லூரி.
2ம் இடம்: தெல்லிப்பழை யூனியன கல்லூரி.
3ம் இடம்: இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்.

**சண்டிலிப்பாய்க் கோட்டம்**

**15 வயதின் கீழ் (ஆண்கள்)**

1ம் இடம்: சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.
2ம் இடம்: ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தி.
3ம் இடம் புனிதகென்றியரசர் கல்லூரி.

**17 வயதின் கீழ் (ஆண்கள்)**

1ம் இடம்: ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தி.
2ம் இடம்: சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.
3ம் இடம்: மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.

**19 வயதின் கீழ் (ஆண்கள்)**

1ம் இடம்: ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தி.
2ம் இடம்: சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.
3ம் இடம் மாதகல் சென் ஜோசெப் கல்லூரி.

**உடுவில் கோட்டம**

**15 வயதின் கீழ் (ஆண்கள்)**

1ம் இடம்: இணுவில் மத்திய கல்லூரி.
2ம் இடம்: ஸ்கந்தவரோதயக் கல்லூரி.
3ம் இடம்: இணுவில் இந்துக் கல்லூரி.

**17 வயதின் கீழ் (ஆண்கள்)**

1ம் இடம்: இணுவில் இந்துக் கல்லூரி.
2ம் இடம் இணுவில் மத்திய கல்லூரி.
3ம் இடம்: யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

**19 வயதின் கீழ் (ஆண்கள்)**

1ம் இடம்: யா/இணுவில் மத்திய கல்லூரி.

**சங்கானைக் கோட்டம்**

**15 வயதின் கீழ் (ஆண்கள்)**

1ம் இடம்:சங்கானை சிவப்பிரகாச வித்தி.
2ம் இடம் அராலி சரஸ்வதி வித்தி.
3ம் இடம்: வட்டு. மத்திய கல்லூரி.

**17 வயதின் கீழ் (ஆண்கள்)**

1ம் இடம்: சங்கானை சிவப்பிரகாசம் வித்தி.
2ம் இடம்: வட்டு. மத்திய கல்லூரி.
3ம் இடம்: வட்டு. இந்துக்கல்லூரி.

**19 வயதின் கீழ் (ஆண்கள்)**

1ம் இடம்: சங்கானை சிவப்பிரகாசம் வித்தி.
2ம இடம் வட்டு .மத்திய கல்லூரி. (யே-83)

## திருத்தம்

04.03.2004 வெளியான வலம்புரியின் 3வது தமிழீழ தேசிய விளையாட்டு விழா பற்றிய விமர்சனக் கட்டுரையில இறுதிப் போட்டிகளின் அடிப்படையல் சிறந்த விளையாட்டு வீர வீராங்கனைகளாகத் தெரிவு செய்யப்பட்டோர் பற்றிய பட்டியலில் தாச்சி(பெண்) ம.சுபாஜினி (யாழ்)வலைப்பந்தாட்டம் (பெண்) இ.நித்தியா (யாழ்) என்னும் விபரங்களே சரியானவை. இத்தரவுகள் மேற்படி கட்டுரையில் தவறுதலாக மாறுபாடாகவும் சேர்க்கப்படாமல் உள்ளது. தவறுக்கு வருந்துகிறோம். (ஆ-ர்)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(சில்லாலை)

யா/மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 10.03. 2004 பி.ப.1.45 மணிக்குப் பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இந் நிகழ்விற்கு கல்லூரி அதிபர் திரு.வி.சுப்பிரமணியம் தலைமை தாங்குவார். பிரதம விருந்தினராக சங்கானை மக்கள் வங்கி முகாமையாளர் பொ.அச்சுதம்பிள்ளை அவர்களும் சிறப்பு விருந்தினராக ஓய்வு பெற்ற அதிபரும், சமாதான நீதிவானுமாகிய திரு.கா.அழகரத்தினம் அவர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (யே-58)

* * *

(கோப்பாய்)

ஆவரங்கால் மகாஜன வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வுகள் இன்று பி.ப. 1.30 மணியளவில் நடைபெறவுள்ளது. அதிபர் அ.அருந்தவநேசன தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னமபலமும் சிறப்பு விருந்தினராகக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம் வலி.கிழக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் து.கிா ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (யே-79)

* * *

யாழ்.கரவெட்டி கிழக்கு அ.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வண்மைப் போட்டி இன்று அதிபர் ப.சந்திரபாகு தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வுக்கு வடமராட்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிப்பார். (யே-45)

* * *

(பொன்னாலை)

யாழ்/அராலி சரஸ்வதி மகாவிததயாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிறபகல் 2.00 மணிக்கு நடை பெறவுள்ளது.

அதபர் மா.சோமசேகரம் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்விற்கு யாழ்.பல்கலைக்கழக புற நிலைப் படிப்புகள் அலகின் பீடாதிபதி பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, யாழ். பல்கலைககழக நுண்கலைத் துறைத் தலைவர் கலாநிதி க.சிதம்பரநாதன், திருமதி ப.சிதம்பரநாதன், கவியன்பன், சஞ்சித்குமார், யசிந்தன் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து சிறப்பிப்பர். (யே)

## உலக விளையாட்டு வலம்



உலக ரெனிஸ் சம்மேளனப் போட்டிகளில் சீனாவின் ரீங் லீயை எதிர்த்து விளையாடும் அமெரிக்க வீராங்கனை ஜெனிபர் கபிரியாட்டியை படத்தில் காண்கிறீர்கள். இப் போட்டியில் சீன வீராங்கனையை இவர் தோற்கடித்தார்.



ஆண்களுக்கான உலக ஹொக்கிப் போட்டியில் தென்னாபிரிக்காவைத் தோற்கடித்த ஸ்பெயின் அணியினர் மகிழ்ச்சி வெள்ளத்தில்.



வாஷிங்டன் விஸாட் அணியினரும் ரொரன்ரோ கூடைப் பந்தாட்ட அணியினரும் மோதும் காட்சி.



உலகின் முதன்மைக் கார்ப் பந்தைய வீரர் மைக்கல்.



பிரித்தானிய மெய்வல்லுநர் அணியின் நம்பிக்கை நட்சத்திரம் மக்ஸ் ஜோன்ஸ்.

# விளையாட்டு

# சர்வதேச கிரிக்கெற் தரப்படுத்தலில் பந்துவீச்சில் முரளிதரன் முன்நிலையில்

## துடுப்பாட்டத்தில் மே.இந்திய வீரர்கள் முதலிடம்

பிறைஸ்வோட்டர் ஹவுஸ் கூப்பர் நிறுவனம் வெளியிட்டுள்ள புதிய கிரிக்கெற் தரப்படுத்தலில் ஒரு நாள் சர்வதேச கிரிக்கெற் போட்டிகளிலும் டெஸ்ட் போட்டிகளிலும் பந்து வீச்சில் முத்தையா முரளிதரன் முதலிடத்தில் உள்ளார்.

ஒருநாள் போட்டிகளில் இலங்கையணியின் வேகப்பந்துவீச்சாளரான சமிந்தவாஸ் 3 ஆம் இடத்திலுள்ளார். டெஸ்ட் தரப்படுத்தலில் அவர் 10ஆம் இடத்திலுள்ளார். .

அதேவேளை, டெஸ்ட் மற்றும் ஒருநாள் துடுப்பாட்ட தரப்படுத்தலில் இலஙகையணியினர் எவரும் இடம் பெறவில்லை.

முதன்முறையாக டெஸ்ட் மற்றும் ஒருநாள் துடுப்பாட்ட தரப்படுத்தலில் மேற்கிந்திய தீவுகளின் வீரர்கள் முதலிடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

**ஒரு நாள் சர்வதேச போட்டிகளுக்கான துடுப்பாட்ட வீரர்களுக்கான தரப்படுத்தல் முடிவுகள்**

| துடுப்பாட்டவீரரின் பெயர் | நாடு | பெற்றுள்ள புள்ளிகள் | தரப்படுத்தல் நிலை |
|---|---|---|---|
| கிறிஸ் கையில் | மேற்கிந்தியதீவுகள் | 797 | 01 |
| சச்சின்டெண்டுல்கர் | இந்தியா | 787 | 02 |
| ரிக்கிப்பொண்டிங் | அவுஸ்திரேலியா | 778 | 03 |
| அடெம்கில்கிறிஸ்ட் | அவுஸ்திரேலியா | 778 | 04 |
| ஜக்கலிஸ் | தென்னாபிரிக்கா | 761 | 05. |
| யூசுப்யுகானா | பாகிஸ்தான் | 721 | 06 |
| பிறைன்லாரா | மேற்கிந்தியதீவுகள் | 715 | 07 |
| மத்தியூஹெய்டன் | அவுஸ்திரேலியா | 712 | 08 |
| மார்க்கஸ்ரெஸ்கோரிக் | இங்கிலாந்து | 692 | 09 |
| மைக்கல்பெவன் | அவுஸ்திரேலியா | 690 | 10 |

**ஒருநாள் சர்வதேச போட்டிகளுக்கான பந்துவீச்சாளர் தரப்படுத்தல் முடிவுகள்**

| பந்துவீச்சாளரின் பெயர் | நாடு | பெற்றுள்ள புள்ளிகள் | தரப்படுத்தல் நிலை |
|---|---|---|---|
| முத்தையாமுரளிதரன் | இலங்கை | 885 | 01 |
| ஷோன்பொலக் | தென்னாபிரிக்கா | 880 | 02 |
| சமிந்தவாஸ் | இலங்கை | 829 | 03 |
| ஜேஸன்ஜிலேஸ்பி | அவுஸ்திரேலியா | 799 | 04 |
| பிரெட்லீ | அவுஸ்திரேலியா | 781 | 05 |
| கிளெய்ன்மெக்ராத் | அவுஸ்திரேலியா | 780 | 06 |
| அன்ருபிளின்ரொவ் | இங்கிலாந்து | 774 | 07 |
| ஜேக்கப் ஓரம் | நியூசிலாந்து | 768 | 08 |
| மக்காயா நிற்னி | தென்னாபிரிக்கா | 751 | 09 |
| ஜேம்ஸ்அன்டர்சன் | இங்கிலாந்து | 703 | 10 |

**டெஸ்ட் போட்டிகளுக்கான துடுப்பாட்ட வீரர் தரப்படுத்தல் முடிவுகள்**

| துடுப்பாட்டவீரரின் பெயர் | நாடு | பெற்றுள்ள புள்ளிகள் | தரப்படுத்தல் நிலை |
|---|---|---|---|
| பிறைன்லாரா | மேற்கிந்தியத்தீவுகள் | 895 | 01 |
| ரிக்கிப் பொண்டிங் | அவுஸ்திரேலியா | 891 | 02 |
| ராகுல் ட்ராவிட் | இந்தியா | 884 | 03 |
| மத்தியூஹெய்டன் | அவுஸ்திரேலியா | 881 | 04 |
| ஜக்கலிஸ் | தென்னாபிரிக்கா | 839 | 05 |
| யேசல்கிப்ஸ் | தென்னாபிரிக்கா | 828 | 06 |
| இன்சமாம்உல்ஹக் | பாகிஸ்தான் | 811 | 07 |
| சச்சின்டெண்டுல்கர் | இந்தியா | 783 | 08 |
| மார்கிரிச்சேட்ஸன் | நியூசிலாந்து | 775 | 09 |
| வீ.வீ.எக்ஸ்.லக்ஷ்மன் | இந்தியா | 756 | 10 |

**டெஸ்ட் போட்டிகளுக்கான பந்துவீச்சாளர் தரப்படுத்தல் முடிவுகள்**

| பந்துவீச்சாளரின் பெயர் | நாடு | பெற்றுள்ள புள்ளிகள் | தரப்படுத்தல் நிலை |
|---|---|---|---|
| முத்தையாமுரளிதரன் | இலங்கை | 908 | 01 |
| சொஹிப்அக்தார் | பாகிஸ்தான் | 861 | 02 |
| ஷோன் பொலக் | தென்னாபிரிக்கா | 859 | 03 |
| கிளைன் மக்ராத் | அவுஸ்திரேலியா | 798 | 04 |
| மக்காயா நிற்னி | தென்னாபிரிக்கா | 766 | 05 |
| ஜேசன்ஜிலெஸ்பி | அவுஸ்திரேலியா | 751 | 06 |
| அனில் கும்ளே | இந்தியா | 748 | 07 |
| டெரல் ரொபி | நியூசிலாந்து | 721 | 08 |
| ஹர்பஜன்சிங் | இந்தியா | 655 | 09 |
| சமிந்தவாஸ் | இலங்கை | 629 | 10 |

(யே-68,121)

## மெய்வன்மைப் போட்டி

கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலய இல்லமெய்வண்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பி.ப. 2.00மணிக்கு வித்தியாலய அதிபர் ச.வாமதேவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக பெருந்தெருக்கள் திணைக்கள ஓய்வு பெற்ற தொழில் நுட்ப உத்தியோகத்தர் ந.இராமநாதரும் சிறப்பு விருந்தினாகளாக யாழ்கல்வி வலய முன்னாள ஆசிரிய ஆலோசகா வே.கைலைநாதன், பழைய மாணவன் இரகுபரன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (யே)

## பயிற்சி முகாம்

(யாழ்ப்பாணம்)

சங்கானை கல்விக் கோட்டத்தில் நடைபெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில் முதல் 3 இடங்களைப் பெற்ற அணிகளுக்கான பயிற்சி முகாம நேற்றுத் தொடக்கம் யாழ்ப்பாணச் கல்லூரி மைதானத்தில் உடற கல்வி டிப்ளோமாதாரிகளால் நடாத்தப்படுகின்றது.

பயிற்சிகள் யாவும் இன்று முடிவடையும். (யே)

# தமிழ் இன அழிப்புக்கு உதவிய டொலர்கள்

இலங்கையின் வடக்குக் கிழக்கின் பொருளாதார வளர்ச்சி பற்றி அக்காலததில் அலசப்பட்டபோதெல்லாம் பல கோணங்களில் இருந்தும் பலவிதமான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. ஆக்கபூர்வமான ஆலோசனைகள் ஒருபுறம் அலசப்பட்டாலும் அவற்றையெல்லாம் மட்டம்தட்டும் வகையில் ஒரு கருத்துப் பரவலாகவே விமர்சனத்திற்கு இடப்பட்டது. வடக்கின் பொருளாதாரம் ஒரு 'மணி ஓடர்' பொருளாதாரம் என்பதேஅது.

1948இல் இலங்கை சுதந்திரம் பெற்றபோது அரசசேவையில் வெள்ளையனால் ஆட்சேர்க்கப்பட்டு தமிழர்களே ஏராளமானவர்கள் இருந்ததையும், அவர்கள் மாதாமாதம் தத்தமது குடும்பங்களுக்குச் சம்பளத்தில் ஒருபகுதியை கிரமமாக அனுப்பிவந்ததையும் யாழ்ப்பாணத்தில் ஒரு கணிசமான பகுதியினர் இப்பணத்தைக் கிரமமாகப் பெற்றுச் சிறப்பாக வாழ்ந்ததனையுமே இந்த 'மணிஓடர்' பொருளாதாரம் என்ற விமர்சனம் கிண்டல் செய்தது. தென்னிலங்கையில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த வடபகுதி மக்களும் 'மணி ஓடர்' பொருளாதாரத்தின் முக்கிய பாத்திரங்களாக இருந்தன. தென்னிலங்கை இனவாத கோலம்பூண்டு புறப்பட்டதில் இருந்து அரசசேவைக்கு தமிழர்கள் ஆட்சேர்க்கப்பட்டது குறைவடைந்ததாலும், இனக்கலவரங்களால் தென்னிலங்கையில் பல நகரங்களில் இருந்த தமிழர்களின் வியாபார நிலையங்கள் கைவிடப்பட்டதாலும் இக்காலத்தில் 'மணி ஓடர்' வரலாறு செழுமை குன்றி வந்தது வரலாறு.

இன்று டொலர், யூரோ பொருளாதாரம் மணி ஓடர் பொருளாதாரத்தின் இடத்தை வகிக்கின்றது. உலக நாடுகள் பலவற்றில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் தத்தமது குடும்பங்களுக்கு டொலர்களை அனுப்புகின்றார்கள. இன்று இலங்கையில் வாழும் தமிழர்களின் முக்கிய பொருளாதார வளங்களில் ஒன்றாக உள்ளது இந்த டொலர்களாகும். புலம்பெயர்ந்து வாழும் எவரேனும் ஒரு தமிழர் இலங்கையில் உள்ள ஒருவருக்கு அனுப்பி வைக்கும் இந்த டொலர் கொடுக்கல் வாங்கல் முன்னைய மணி ஓடர் கொடுக்கல்வாஙகலுடன் ஒப்பிடக்கூடியதல்ல.

இந்த டொலர் விவகாரம் நன்கு அலசப்படவேண்டியது. தமிழர்களின் முழு இருப்புடனும் இரண்டறக் கலந்தது. தமிழர்களின் உழைப்புடன் நேரடியான பிணைப்புடைய இது அவர்களின் எதிர்கால வாழ்வுடனும், இலட்சியங்களுடனும் இணைந்துசெல்லும் உயிர்நாடியும் ஆகும்.

1950கள் 1960கள் 1970களில் கொழும்பில் பணியாற்றிய தமிழ் உத்தியோகத்தர்கள் அல்லது மாத்தறையில் சுருட்டுக் கடை ஒன்றை நடத்திய தமிழர் ஒருவர் அஞ்சல் அலுவலகம் சென்று தனது பணத்தைக் கொடுத்து ஒரு காசுக்கட்டளையை எடுத்து அதனை அஞ்சல் மூலமாக ஊருக்கு அனுப்பினார். பெற்றுக்கொண்டவர் அதனை அருகேயுள்ள அஞ்சல் அலுவலகத்தில் பணமாகமாற்றி எடுத்தார். அரசுக்குக் கிடைத்தது மிகச்சிறிய. அந்தக் கமிஷன் அந்தத் திணைக்களத் தேவைகளுக்கே போதாத ஒன்று. வடக்குக் கிழக்குத் தமிழர்களின் மனங்களில் நிரந்தரமாகப் பதிந்துள்ள படங்களில் இலங்கை அஞ்சல் அலுவலகம் ஒன்றினது படமாவது இருக்கவே செய்யும். சுதந்திர இலங்கையின் இரு தமிழ் அமைச்சர்களாகவே இருந்தனர்.

### அபிவிருத்தியின் அத்திபாரம்

டொலர் விவகாரம் அத்தகையதல்ல முற்றிலும் வேறுபட்டது. சர்வதேச நாணயமொன்றை இலங்கைக்கு அனுப்பும் ஒருவர் வழமைபோல் ஒரு சிறு கமிஷனை வங்கிகளுக்கு வழங்குகிறார். அதன்படியே அரசாங்கமும் சிறு வருமானத்தைப் பெறுகிறது என்பதை மட்டுமே சாதாரணமாக மக்கள் புரிந்துகொள்ளுவார். வெளிப்படையாக தெரிவது அந்த அளவே இதில் அரசாங்கம் பெற்றுக்கொள்ளும் இமயமளவு பயன்கள் மத்திய வங்கியின் பாகம் என்பன பற்றிப் பார்ப்பதும் இத்தகைய ஒன்று. கடந்தகாலங்களிலும் நடைபெற்ற யுத்தங்களிலும் ஏற்படுத்திய தாக்கங்கள் பற்றியும் பார்ப்பது பயனுள்ளதாகும். எதிர்காலத்தில் தமிழர்கள் தமது தாயகப் பகுதிகளின் அபிவிருத்தியை உறுதியான அத்திபாரம் ஒன்றில் வைத்து கட்டுவதற்கு உதவக்கூடியதுமாகும்.

1980களின் ஆரம்பத்தில் திறந்த பொருளாதாரக் கொள்கைகள் அமுல்செய்யப்படுவதற்கு முன் இலங்கையின் மிகப்பெரிய பிரச்சினையாக இருந்தது. அந்நியச் செலாவணி பிரச்சினையாகும். இதுபற்றி நினைவுக்குக் கொண்டு வருதல் பயனுள்ளது. அது எந்த அளவுக்கு நாட்டை ஆட்டிப்படைத்தது என்பதை அக்காலத்தில் சமைத்த உணவைச் சிக்கனப் படுத்துவது பற்றி எழுந்த சிக்கல்கள் ஓரளவு விளங்குகின்றன. பிரதான உணவான அரிசியை இறக்குமதி செய்ய முடியாமல் அரசு தத்தளித்து நிற்கின்றது. ஹோட்டல்களில் குறிப்பிட்ட நாட்களுக்கு மட்டுமே சோறு சமைக்கவேண்டும் என்றும் ஒரு கலியாண வீட்டிற்கு 100 பேருக்கு மேல் அழைக்கப்படக்கூடாது என்றும் அரசாங்கம் அறிவித்தல்கள் வெளியிடப்பட்டன. ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையினருக்கே குறிப்பிட்ட அளவு பாண் மட்டுமே விநியோகிக்க முடியும் என்று பாண் தயாரிப்பு நிலையங்கள் அறிவித்தன. பிரித்தானியா வீசா பெறுவதற்கு அதிகாலையில் கொழும்பில் உள்ள தூதரகத்திற்குச் சென்று வரிசையில் இன்று மக்கள் காத்து நிற்பதுபோல் அக்காலத்தில் பேக்கரிமுன் மக்கள் வரிசையில் காத்து நின்றனர். 'கியூ'வில் நின்று சிறுவர்கள் வாங்கிச் சென்ற பாணை வழிப்பறிக் கோஷ்டியினர் பறித்த சம்பவங்கள் பத்திரிகைகளில் வெளியாகின. குழந்தைகளின் பால்மா கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்தினால் மாதம் ஒருமுறை வழங்கப்பட்டது.

1980 களின் பின்னர் முக்கியமாக 1983 ஆடிக் கலவரத்தின் போது பின்னைய காலங்களில் அந்நியச் செலாவணிப் பிரச்சினை சூரியனைக் கண்ட இருள்போல மறைந்தது எப்படி? இதனைத் தொடர்ந்துவந்த காலங்களில் தாராள இறக்குமதிகள் வந்து குவிந்தனவே! 20 ஆண்டுகால யுத்தத்திற்குத் தேவையான ஆயுதக் குவியல்கள் கப்பல் கப்பலாகத் தருவித்துக் குவிக்கப்பட்டனவே. கிபிர் விமானங்களும், மிகையொலி விமானங்களும் கொள்வனவு செய்யப்பட்டனவே. குழந்தைகளின் பால்மாவை இறக்குமதி செய்வதற்கு முடியாமல்போன வக்ரோத்து அரசாங்கம் காடுகளைக் கூட அழிக்கவும் கடலை நிரப்பவும் கூடியளவு வெடிபொருட்களால் வடக்கு-கிழக்கு மாகாணங்களை நிரப்ப முடிந்ததன் மர்மம் ஒன்று இருக்கவே இருக்கிறது.

### வளமான அந்நியச் செலாவணி

இலங்கையின் அந்நியச் செலாவணி வளம் வற்றாத வளமாகி நின்றது. இப்போது நிற்கிறது. ஒருபுறம் திறந்த பொருளாதாரக் கொள்கை காரணமாக மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலை வாய்ப்புப பெற்றுச் சென்றவர்களால் மத்திய வங்கிக்கு டொலர்கள் கிடைத்தன. மறுபுறம் தமிழர்கள் வாழ்விடங்களில் இருந்து விரட்டப்பட்டு வெளிநாடுகளுக்கு அகதிகளாகச் செல்லும் நிலமை உருவாகியதனால் பெறப்பட்ட அனுகூலம் இருக்கிறது. அதாவது உற்றாரையும், உறவினரையும், குடும்பத்தினரையும் பெற்றாரையும் இழந்து பிரிந்து பிறந்த பூமியில் வாழ விடாது படையினரால் விரட்டப்பட்டும் நாட்டை விட்டு வெளியேறி உயிர்களைக் காப்பாற்றிக்கொள்ளத் தமிழர்கள் டொலர்களை அனுப்பினார்கள். அவற்றிற்குச் சமமான இலங்கை ரூபாக்கள் டொலருக்குப் பதிலாக உறவினருக்கு வழங்கப்பட்டன. டொலர்களை அரசாங்கம் தானே வைத்துக்கொண்டது. அது ஆயுதக் கொள்வனவுக்குப் பயன்பட்ட அந்நியச் செலாவணி.

பெருந்தொகையான டொலர்கள் தமிழர்களிடம் இருந்தே கிடைத்தன. அவற்றையெல்லாம் குவித்துவைத்து வெளிநாடுகளுக்கு மில்லியன் மில்லியனாகக் கூசாமல் கொடுத்தே ஆயுதங்கள் குவிக்கப்பட்டன. பஞ்சமில்லாது டொலர்கள் கிடைக்கவே போர் தீவிரம் பெற்றது. தமிழர்களைக் கொன்று குவிப்பத ற்கும், தமிழர்கள் உடைமைகளைக் குண்டு வீசி அழிப்பதற்கும் தமிழர்கள் அனுப்பிய டொலர்களே பயன்பட்டன. தெளிவாகக் கூறினால். பிள்ளைகள் அனுப்பிய டொலர்களுக்கு கொள்வனவு செய்த குண்டுகளைப் பெற்றோருக்கும் உறவினருக்கும் வீசி அவர்களைக் கொன்று கபளீகரம் செய்தது அரசு. வெளிநாடுகளில் செல்லுபடியாகாததும், உள்நாட்டில் அச்சடித்ததுமான கடதாசி நாணங்களைப் பெற்றுக்கொண்டு தமிழர்கள் மேல், டொலர்கள் கொடுத்து கொள்வனவு செய்யப்பட்ட குண்டுகள் வீழ்ந்தன. யுத்தம் மென்மேலும் அகோரமடைய மென்மேலும் தமிழ்ர்கள் புலம்பெயர்ந்து செல்லச்செல்ல மென்மேலும் டொலர்கள் கிடைக்கக் கிடைக்க குண்டுமழை விழுந்தன.


### தமிழர்களின் இலட்சியக் கனவு

சமாதான ஒப்பந்தம் 2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட பின்னைய காலத்திலும் டொலர்கள் இலங்கை அரசாங்கத்தின் மத்திய வங்கிக்கு வருகின்றன. மேலும் மேலும் டொலர்களைத் தருவிப்பதற்கு வங்கிகள் மூலமாகப் பலவித ஊக்குவிப்புக்களும் வழங்கப்படுகின்றன. யுத்தம் ஓய்வு பெற்றதால் இவற்றையெல்லாம் பயன்படுத்தி இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் 'மீட்சிபெறும் இலங்கை''யைக் கட்டியெழுப்புவதற்குப் பயன்படுகின்றன. மீண்டும் தமிழர்களின் டொலர்கள் தென்னிலங்கைக்கு அதிகம் பயன்படுகின்றன.

எவ்வாறாயினும், சமாதானத்துடன் வாழ முடிந்தாலும், இல்லாது போயினும் கூட தமிழர்களுக்கென தனியான வங்கிக் கட்டமைப்பும் முதலீடுகளும், நலன்புரி சேவைகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகளும் தாயகத்தில் ஏற்படுத்தப் படுவதை ஊக்குவிக்கும திசையில் தமிழர்கள் சிந்தித்தல் காலத்தின் தேவையாகும். வெளிநாடுகளில் வாழக்கூடிய 10 இலட்சம் வரையிலான இலங்கைத் தமிழர்கள் ஊருக்கு ஒருநாள் திரும்பி வருவேன். அதுவே எனக்குத் திருநாள் என்று மனதிற்குள் உச்சரித்துக் கொண்டே இருப்பார்கள். அவர்களின் கனவுலகம் நனவுலகம் ஆவதற்கு அவர்களே முயற்சிக்க வேண்டும்.

பேரினவாதத்தின் யுத்தவெறிக்கு உடலையும், உள்ளத்தையும், உடமைகளையும் இழந்த நிலையிலும் இலங்கை அரசாங்கத்தின் உயிர்நாடியான அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் புலம்பெயர்ந்த தமிழர்களின் மனக்குறைகள் நீங்க வேண்டும். அவர்கள் ஆறுதல் அடைதல் வேண்டும். வடக்கு- கிழக்கின் தமிழர்கள் அனைவருக்கும் இலவச ஆயுள் காப்புறுதித் திட்டத்தை அமுல் செய்வதுகூட தகுந்த பிராயச்சித்தமாகும். சமாதான அனுசரணையாளர்கள் சிந்திக்கக் கூடிய விடயம் இது. இது நடைமுறைக்குச் சாத்தியமற்ற தொன்றல்ல. 10,000 இலங்கை ரூபாக்களை வைப்பிலிடும் ஒருவருக்கே பல லட்சம் பெறுமதியான ஆயுட் காப்புறுதியை இலங்கையின் வங்கி ஒன்று முன்னோடியாக வழங்கி வருகின்றது. ★

நீரன்





யாழ். பல்கலைக் கழகத்தில் இன்று ஆரம்பமான மருத்துவக் கண்காட்சியில் பிடிக்கப்பட்ட படங்கள்.



யாழ்ப்பாண சைவபரிபாலன சபையின் ஏற்பாட்டில் நேற்று இடம்பெற்ற சைவ மாநாட்டின்போது எடுக்கப்பட்டவை.

## பாஷையூர் கடற்கரை வீதியில் மீளக் குடியமர அனுமதி மறுப்பு

(கொழும்புத்துறை)

பாஷையூர் கடற்கரை வீதியில் மீளக்குடியமர்வதற்கு படையினர் அனுமதி மறுத்துள்ளனர்.

அண்மையில் மேற்படி பிரதேச வாழ் மக்களுக்கும் படைத்தரப்பினருக்கும் மிடையில் இது தொடர்பான சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

இதன் போது மேற்படி பிரதேசத்தில் உள்ள இராணுவ அதி உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றி மக்களை மீளக் குடியமர அனுமதி வழங்குமாறு மக்கள் பிரதிநிதிகள் கோரிக்கைவிடுத்தனர்.

அத்துடன் சொந்த இடங்களில் மீளக்குடியமர முடியாத நிலையில் தற்காலிக வாழ்விடங்களில் தாம் அனுபவிக்கும் அசௌகரியங்கள் தொடர்பாகவும் படையினர்க்கு விளக்கிக் கூறினர்.

ஆனால் மேற்படி பிரதேசத்தில் மக்களை குடியமர்த்துவது தமது பாதுகாப்பிற்குக் குந்தகமாக அமையும் என்பதைக் காரணம் காட்டி இக் கோரிக்கைகளை படையினர் நிராகரித்ததுடன்,எது வித சாதகமான மாற்று வழிகளையும் படையினர் கூறவில்லை.

இதே வேளை, இராணுவ அதி உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள மேற்படி பிரதேசத்துள் 250 ற்கும் மேற்பட் வீடுகள் முடக்கப்பட்டுள்ளமையும் இதனால் 250 குடும்பங்களைச சேர்ந்த சுமார் 2000 பேர் செந்த வாழ்விடங்களை இழந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(உ-51)

## குழாய்க் கிணற்றுப் பம்பி பழுது

(கல்வயல்)

சாவகச்சேரி சந்தைப்பகுதியில் உள்ள குழாய்க்கிணறு பாவிக்கமுடியாத நிலையில் உள்ளது.

அதிகளவானோர் பாவிக்கும் மேற்படி குழாய் கிணற்றின் நீர் உறிஞ்சும் பம்பி பழுதடைந்து போயுள்ளதனாலேயே இதனை மக்கள் பாவிக்கமுடியா நிலை காணப்படுகிறது.

இதனால் பாவனையாளர்கள் நீர் பெறுவதற்கு அலைந்து திரியும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

( உ-36)

வெள்ளத் தனைய இடும்பை அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும்.

-குறள்

வலம்புரி

# கண்ணீரால் காத்தோம் சர்வேசா...

ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டம் தமிழ் மக்களின் தியாகங்கள் - அர்ப்பணிப்புகள், ஆத்மபலப் பிரார்த்தனைகள் என்பவற்றால் கட்டியெழுப்பப்பட்டது.

இதற்காக 17 ஆயிரத்திற்கும் மேற்பட்ட போராளிகளும், எண்பதாயிரத்துக்கும் மேற்பட்ட பொது மக்களும் தங்கள் இன்னுயிரை ஈந்தளித்துள்ளனர்.

காலத்திற்குக் காலம் தமிழ் மக்களின் உயிர்களை சிங்களப் பேரினவாதம் தனது இனவாதப் பசிக்கு இரையாக்கிக் கொண்டதன் காரணமாகவே தமிழ் மக்கள் ஆயுதம் ஏந்திப் போராடும் முடிவுக்கு வந்தனர். ஆயுதப் போராட்டத்தின் போதும் பல்வேறு போராட்டக் குழுக்கள் தோற்றம் பெற்று தமிழினத்தின் ஒற்றுமைக்குக் குந்தகம் விளைவித்தன.

எனினும் ஈற்றில் விடுதலைப் போராட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஓர் தலைமையின் கீழ் முன்னெடுக்கப்பட்டது.

இதனால் ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டம் சர்வதேசத்தின் கவனத்தை மிக வேகமாக - அக்கறையோடு ஈர்த்தது.

தமிழ் மக்களின் தாயக உணர்வை - அவர்களின் இனமொழிப்பற்றை யாராலும் எதுவும் செய்யமுடியாது. விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள போராளிகளின் அர்ப்பணிப்பு - தியாக சிந்தை - தலைமைக்குக் கொடுக்கும் மதிப்பு என்பனவற்றாலேயே யாரும் நினைத்துப்பார்க்க முடியாத தாக்குதல்களை தமிழர்களால் மேற்கொள்ள முடிந்தது என்ற உண்மையை உலக நாட்டு ராஜதந்திரிகள் ஏற்றுக்கொண்டனர்.

அதன் விளைவாகத் தமிழ் மக்களின் பிரச்சினையை பேசித் தீர்க்க வேண்டும் என அழுத்தங்களை சர்வதேச நாடுகள் இலங்கை அரசுக்குக் கொடுத்தன.

இதன் காரணமாகவும் போராளிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாமை காரணமாகவும் பேச்சுவார்த்தை - யுத்த நிறுத்தம் என்ற சமாதானப் பாதைக்கு சிங்கள ஆட்சியாளர்கள் இறங்கிவரத் தொடங்கினர்.

எனினும் அவற்றின் கால தாமதங்கள், அரசியல் குழப்பங்கள் காரணமாகப் பேச்சுக்கள் இடை நடுவில் நின்றுபோக, பாராளுமன்றத் தேர்தலுக்கும் அறிவிப்பு விடுக்கப்பட்டது.

இத்தகையதோர் குழப்பமான நிலையிலும் தொடர்ந்தும் யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிக்கப்படும் என்ற உத்தரவாதம் தமிழர் தரப்பால் அறிவிக்கப்பட்டது.

இத்தகையதோர் அறிவிப்பு விடுதலைப்போராட்டத்தின் நியாயப்பாட்டை, அதன் உன்னதத்தை உலக நாடுகளுக்கு உணர்த்தியிருந்தது. இதனால் உலக நாடுகள் தமிழர்களின் போராட்ட மேன்மையை - சமாதானத்தின்பால் அவர்கள் கொண்டுள்ள பற்றுறுதியைப் பாராட்டினர் - வரவேற்றனர்.

உலக நாடுகள் அனைத்தும் இலங்கைக்குள் நுழைந்து தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண முயற்சிக்கும் சூழ்நிலையில், இலங்கையில் தமிழர்களின் இருப்பை, அவர்களின் சுதந்திரம், உரிமை என்பவற்றின் உறுதிப்பாட்டை அடைந்து கொள்வதற்கான விடுதலைப் போராட்டம் இதுவே, இத்தகையதோர் போராட்டம் முன்பும் இருந்ததில்லை, இனிமேலும் ஏற்படப் போவதில்லை என்ற உணர்வோடு உலக நாட்டில் வாழும் ஒவ்வொரு தமிழனும் விடுதலைப் போராட்டத்தின் உயர்வுக்காக, அதன் வெற்றிக்காகத் தமது ஆத்மார்த்தமான தியாகங்களை - ஆதரவுகளை வழங்கி நின்றனர்.

ஆனால் அந்த உன்னதமான - புனிதமான - தமிழ் மக்களின் குருதியோடு கலந்து போன விடுதலைப் போராட்டத்திற்குள்ளும் சர்வதேசத்தின் ஊடுருவல்கள் நுழைந்துவிட்டனவோ, தமது எண்ணத்தை நிறைவேற்றக் காரியம் கண்டுவிட்டனரோ என்ற ஏக்கம் "தண்ணீர் விட்டோ வளர்த்தோம் சர்வேசா கண்ணீரால் காததோம்..." என்ற பாரதியின் பாடல் வரிகளை மீட்க வைக்கின்றது.

# தேர்தலையடுத்து அரசியலமைப்பு மாற்றம் பின்னர் பிரதமர் பதவி ஜனாதிபதிக்கு

## திட்டத்தை உறுதிப்படுத்தினார் மகிந்த

(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் அரசியலமைப்பு மாற்றம்ஒன்றின் மூலம் பிரதமர் பதவியேற்க ஜனாதிபதி திடடமிட்டுள்ளார்.

அண்மையில் அம்பாந்தோட்டை மிந்தெனிய நகரில் இடம்பெற்ற தேர்தல் பிரசார கூட்டம் ஒன்றில் இந்தக் கருத்துத் தொனிக்கும் வகையில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் இணை அமைப்பாளரும், முன்னாள் எதிர்க் கட்சித் தலைவருமான மிகிந்த ராஜபக்ஷ உரையாற்றியுள்ளார்.

இம்முறை தேர்தல் முடிவடைந்த பின்னர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை நீக்கி ஜனாதிபதியை நாம் நாடாளுமன்றத்துக்கு அழைத்து,

தேர்தலில் தாம் வெற்றி பெற்றதும், ஜனாதிபதி மாளிகைக்குச் சென்று அவரை தூக்கிக் கொண்டு வந்து நாடாளுமன்ற ஆசனத்தில் அமரச் செய்வோம் என்று மகிந்த மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அரசியலமைப்பை மாற்றுவதன் மூலம் ஜனாதிபதி ஆடசி முறையை நீக்கி மீண்டும் வெஸ்ட் மினிஸ்டர் ஆட்சி முறையைக் கொண்டுவருவதற்கான மக்களாணையைக் கோருவதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனம் அமையவிருப்பதாகவும் இதன் மூலம் தனது பதவிக காலம் முடிந்ததும் தொடர்ந்தும் பிரதமராக அதிகாரத்தில் நீடித்திருக்க ஜனாதிபதி திட்டமிட்டுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ள நிலையில் மகிந்த ராஜபக்ஷவின் இந்த உரை அதனை உறுதி செய்வதாக அரசியல அவதானிகள்கருத்து வெளியிட்டுள்ளனர்

(உ)

# புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் வாக்குச்சாவடிகளை நிறுவ வேண்டாம்

## ஜாதிக ஹெல உறுமய வலியுறுத்து

(ஹம்பகா)

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வாக்குச் சாவடிகள் நிறுவப்படக்கூடாதென ஜாதிக ஹெல உறுமய வலியுறுத்தியுள்ளது.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துள் வசித்துவரும் மக்கள் வாக்களிப்பது குறித்துப் பல்வேறுபட்ட தகவல்கள் வெளியாகிவருகின்ற இந்நிலையிலேயே ஜாதிக ஹெல உறுமய இதனை வலியுறுத்தியுள்ளது.

மேலும் கருத்து வெளியிட்டுள்ள ஜாதிக ஹெல உறுமய, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துள் வாக்கெடுப்பு நடத்துவது வாக்காளர்களதும் வேட்பாளர்களதும் உரிமைகளைப் பாதிக்கும் தமது கட்டுப்பாடுள்ள பிரதேசத்துள் பிரவேசிப்பதை புலிகள் ஏற்றுக் கொள்ளாத பட்சத்தில் வாக்கெடுப்புகள் முறைகேடான ஒன்றாக மாறிவிடும்.

இதேபோலவே இராணுக் கட்டுப்பாட்டிற்கும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிற்கும் இடைப்பட்ட சூனியப் பிரதேசத்துள் வாக்கெடுப்புகளை நடத்துவதும் நம்பகரமானது அல்ல என்று தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஜே.வி.பியினரும் ஏற்கனவே இவ்விடயத்தை தேர்தல் ஆணையாளர் ரி.திஸநாயக்கவிடம் வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-64,4)

## துப்பாக்கி முனையில் பணத்தைக் கொள்ளையடித்தவருக்கு 21ஆண்டுகளின் பின் சிறைத்தண்டனை

(யாழ்ப்பாணம்)

1983ஆம் ஆண்டு துப்பாக்கி முனையில் கொள்ளையடித்த நபருக்கு 7ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்து யாழ்.மேல்நீதிமன்றம் கடந்த புதன்கிழமை தீர்ப்பளித்துள்ளது.

1983ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பருத்தித்துறையில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க எரிபொருள் விறபனை நிலையத்தில் ஆழவாப்பிள்ளை கந்தசாமி உடமையில இருந்த ரூபா 220 ரொக்கப் பணத்தைத் துப்பாக்கிமுனையில் கொள்ளைஅடித்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ் திருநாவுக்கரசு ரஞ்சன்,வேலாயுதம் செலவரததினம் ஆகியோருக்கு எதிராக சட்டமா அதிபரினால் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்வழக்கின் எதிரிகள் தலைமறைவாகியுள்ளதால் எதிரிகள் இல்லா விசாரணைகள் யாழ். நீதிமன்ற நீதிபதி திரு.கே.பி. எஸ்.வரதராஜா முன்னிலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற போது, முதலாம் எதிரி திருநாவுக்கரசு ரஞ்சனை குற்றவாளி யாகக் கண்ட நீதிபதி அவருக்கு 7வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்தார்.

குற்றச்சாட்டு நிரூபிக்கப்படாமையால் 2ஆம் எதிரி வேலாயுதம் செல்வரததினம் விடுதலை செய்யப்பட்டார்.

மேலும்,முதலாம் எதிரிக்கு எதிராக நீதிமன்றத்தினால் பகிரங்கப்பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.நாட்டுச் சூழ்நிலை காரணமாக நீதிமன்ற அமர்வுகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமையால் இவ்வழக்கு விசாரணை மீண்டும் இயங்கிய யாழ்.மேல நீதிமன்றத்தினால் விசாரணை செய்யப்பட்டு தீர்ப்பளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-3)

## வீடியோப் படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையததால் காண்பிக்கப்படும் திரைப்படக் காட்சித் தொடரில் 'குருட்டுச்சாட்சி' என்னும் மராத்தி மொழிப்படமும் 'மும்பாய் ரக்ஸி ஓட்டுநர்' பற்றிய விபரணப்படமும் காண்பிக்கப்படவுள்ளது.

நாளை 3.30 மணியளவில் யாழ்.ஜும்மாப் பள்ளிவாசல் வீதியில் உள்ள ஊடகவள நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ள இப் படக்காட்சி நிகழ்வைத் தொடர்ந்து முக்கிய கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறவுள்ளது.

ஆர்வமுள்ளவர்கள் பங்குகொண்டு பயன்பெறலாம் என மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-4)

## யாழ்.பல்கலையில் 13 ஆம் திகதி சமாதானச் சுருள் திரைப்பட விழா

(யாழ்ப்பாணம்)

ஸ்க்றிபற நெற் நிறுவனம் யாழ்.பல்கலைக்கழக புற நிலைப படிப்புக்கள் அலகுடன் இணைந்து எதிர்வரும் மார்ச் மாதம் 13ஆம் திகதி கைலாசபதி கலையரங்கில் நடாத்தவிருக்கின்ற சமாதானச் சுருள் திரைப்பட விழா பற்றிய பத்திரிகையாளர் சந்திப்பொன்று நேற்று முன்தினம் 127/16, கோவில் வீதி, நல்லூர் என்னும் முகவரியில் அமைந்துள்ள டிஜிற்றல் மீடியா நெற்வேக் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதில் ஸ்க்றிப்ற் நெற் நிறுவனம் யாழ். பல்கலைக்கழக புற நிலைப் படிப்புக்கள் அலகுடன் இணைந்து கடந்த 2002 டிசம்பர் மாதம் ஆரம்பித்த சமாதானச் சுருள் திரைக்கதை எழுத்தாளர்கள், தயாரிப்பாளர்கள் பயிற்சியின் பெறுபேறாகத் தயாரிக்கப்பட்ட 5 திரைப்படங்களின தொகுப்புத் திரையிடப்பட்டு பத்திரிகைளார்கள் தரப்பிலிருந்து விமர்சனங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

இதேவேளை, மேற்படி 5திரைப்படங்களுடன் தென்னிலங்கையில் ஸ்க்றிப்ற் நெற் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட 2 திரைப்படங்கள் இம்மாதம் நாடெங்கிலும் திரையிடப்படவுள்ளதுடன் யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறவிருக்கும் சமாதானச் சுருள் திரைப்பட விழாவானது பெருந்திரளான சிங்கள, தமிழ் திரைப்படக்கலைஞர்களது ஒன்றுகூடல நிகழ்வாக இடம்பெறவிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-3)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

நீ தூய்மை உள்ளவனாக இருந்தால், வலிமையுள்ளவனாக இருநதால் நீ ஒருவனே உலகில் உள்ள அத்தனை பேருக்கும் சமனானவனாவாய. நீ உற்சாகத்துடன் இருக்கத் தொடங்குவதுதான், நீ சமய வாழ்க்கை வாழ ஆரம்பிப்பதற்கான முதல் அறிகுறியாகும்.

சுவாமி விவேகானந்தர்.

## தவக்கால சிந்தனை-11

ஒரு மனிதன் எப்பொழுது மனநிறைவுள்ளவனாக இருக்கின்றான்? தன்னைப் பற்றி அறிவதாலோ, தனது திறமைகள் அனைத்தையும் வெளிக்கொணர்வதாலோ அவன் நிறைவடைவதில்லை. மாறாக, எப்பொழுது அவன்தன் வாழ்க்கையை பிறரோடு இணைத்துக்கொள்கிறானோ, எப்பொழுது பிறருக்கு உதவ முன்வருகிறானோ அப்பொழுது தான் அவன் நிறைவுள்ளவனாக இருக்கின்றான். கடவுள் நிறைவுள்ளவர். அவர் நல்லோர் மீதும்,தீயோர் மீதும் அனுசரணை காட்டுகிறார்.இதுதான் ஓரவஞ்சனையில்லாத அன்பு.இயேசு நிறைவுள்ளவர். காரணம்,அவர் நல்லோர்க்காகவும், தீயோருக்காகவும் உயிர்த் தியாகம் செய்தார்.நம்முடைய நிறைவை உடையிலோ, உணவிலோ, பதவியிலோ, பணத்திலோ காணாது பிறர் அன்பில் காண்போம்.

காவலன்

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்
களுக்கும் பார்சல் சேவைகளுக்கும்
MANOJ EXPRESS SERVICE
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
இல.13, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
யாழ்.:
021 222 3916
0777 801038
கொழும்பு:
T.P.: 2390128
Fax: 2399650
Mob: 0777 517019

# வாக்குச் சீட்டு அச்சிடும் பணி இடைநிறுத்தம்

(கொழும்பு)

கொழும்புப் பிரதேசத்திற்கான பாரிய நீர்மின் விநியோகத்திட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளதை அடுத்து வாக்குச் சீட்டுக்கள் அச்சிடும் பணி பாதிக்கப்பட்டுள்ளதாக அரச அச்சகர் நிவில் நாணயக்காரா தெரிவித்துள்ளார். 22 தேர்தல் மாவட்டங்களில் இதுவரை 4 மாவட்டங்களின் வாக்குச் சீட்டுக்கள் மட்டுமே அச்சடிக்கப்பட்டுள்ளது. எனினும் நேற்று நீர் மின் விநியோகத்தில் ஏற்பட்ட தடை காரணமாக 5மணி முதல் அச்சிடும் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளதாக நிவில் நாணயக்காரா தெரிவித்துள்ளார். கொழும்பு பிரதேசத்திற்கான பாரிய நீர்மின் விநியோகத்திட்டம் சீரான நிலைக்கு வந்ததும் வாக்குச் சீட்டு அச்சிடும் பணிகள் துரிதமாக்கப்படும் என்றும் அவர் கூறினார். (ம)

WESTERN UNION MONEY TRANSFER
மூலம்
சில நிமிட நேரத்தில் உங்கள் கைகளில் பணம் கிடைக்க
எம்மிடம் நாடுங்கள்
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303 K.K.S. வீதி, யாழ்ப்பாணம்
T.P : 021 222 5392
Fax : 222 3214
E.mail : smskr@eureka.lk
சிவன் கோவில் வீதி, காரைநகர்
T.P : 0602212472

## ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகள் நாளை கொழும்புக்கு வருகை

(கொழும்பு)

எதிர்வரும் பாராளுமன்றப் பொதுத்தேர்தலுக்கான கண்காணிப்புப் பணியில் ஈடுபடவென ஐரோப்பிய யூனியனைச் சேர்ந்த 63 பேர் அடங்கிய குழுவினர் நாளை ஞாயிற்றுக்கிழமை கொழும்புக்கு வரவுள்ளதாக இலங்கைத் தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதேவேளை பங்களாதேஷ், நேபாளம், ஆகிய நாடுகளைச் சேர்ந்த தேர்தல் கண்காணிப்பாளர்களும் எதிர்வரும் 21ம், 22ம் திகதிகளில் இலங்கைக்கு வரவுள்ளதாக தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச)

## தேர்தல் பிரசாரம்

(கொழும்பு)

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்த் தேசிய சேவையினால் பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பிரசார நிகழ்சித் திட்டம் ஒன்று இன்று ஆரம்பமாகின்றது. பிற்பகல் 5 மணியில் இருந்து 5.15 வரை நடாத்தப்படவுள்ள இந்நிகழ்வில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட வேட்பாளர் எம்.கே. சிவாஜிலிங்கம் இன்று உரையாற்றவுள்ளார். (ச)

## லொத்தர் சபைக்கு புதிய தலைவர் நியமனம்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவினால் பொறுப்பேறகப்பட்ட தேசிய அபிவிருத்தி லொத்தர்சபையின் புதிய தலைவராக உள்நாட்டு விமானசேவை பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் முன்னாள் செயலாளர் டபிள்யூ பி.எவ.ஜெயவர்த்தனா நியமிக்கப்பட்டுள்ளார்.

பணிப்பாளர்சபை உறுப்பினர்களாக ஹரீம்பீரிஸ், ரஞ்சித்தேநுவர ஓ.விக்கிரமசிங்கா ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர். (ச)

## பாலைதீவில் பரிதவித்தவரை மீனவர்கள் மீட்டுவந்தனர்

(மன்னார்)

மன்னார் பேசாலையில் இருந்து பாலைதீவுக்கு மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் பாலைதீவில் தனியாக உதவியின்றிப் பரிதவித்து நின்ற ஒருவரை மீன்பிடிப் படகில் ஏற்றிப் பேசாலையில் சேர்த்துள்ளனர்.

வவுனியா கூழாங்குளத்தைச் சேர்ந்த அ.கனகரத்தினம் (வயது -44) என்பவரே இவ்வாறு காப்பாற்றப்பட்டவராவார்.

இச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது, இந்திய அகதி முகாமில் இருந்து சொந்த ஊருக்குத் திரும்பிவர விரும்பி இந்திய மீன்பிடிப் படகில் ஏறிவந்தவேளை படகோட்டிகள் இவரைப் பாலதீவில் இறக்கிவிட்டுச் சென்றுள்ளனர்.

பாலைதீவில் உதவியின்றிப் பரிதவித்த இவர் பேசாலை மீனவர்களுக்குச் சைகை காட்டி வரவழைத்து அவர்களுடன் பேசாலையைச் சென்றடைந்துள்ளார். பின்னர் அங்கு அவர் கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டு கடற்படையினரால் மன்னார் நீதிமன்றத்தில் கடந்த திங்கள் அன்று ஆஜர்செய்யப்பட்டபோது, இவரைச சொந்த இடத்திற்கு அனுப்பி வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (உ-35)

## பௌசியின் அலுவலகம் நேற்று தாக்கப்பட்டது

(கொழும்பு)

ஐககிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கொழும்பு மாவட்ட வேட்பாளரான ஏ.எச்.எம்.பௌசியின் பம்பலப்பிட்டியில் உள்ள தேர்தல் அலுவலகத்தின் மீது நேற்றிரவு இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் நடாத்தியுள்ளனர். மூன்று முச்சக்கர வண்டிகளில் வந்த கோஷ்டியினரே இத் தாக்குதலை நடாத்தியதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.பௌசி தெரிவித்துள்ளார். இச்சம்பவத்தில் தமது ஆதரவாளர்கள் இருவர் காயமடைந்ததாகவும், இத்தாக்குதல் சம்பவம் இடம்பெறுவதற்கு முன்னர் மோட்டார் சைக்கிளில் அலுவலகத்துக்கு வந்த இருவர் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டதாகவும், அவர் கூறினார். இதேவேளை, இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக விசேட பொலிஸ் குழு வொன்று ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக, கொழும்பு பிரதி பொலிஸ் மா அதிபர் சிரிசேன ஹேரத் தெரிவித்துள்ளார். மூவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்திருப்பதாகவும், அவர் கூறினார். அத்துடன் முச்சக்கர வண்டி ஒன்றும், மோட்டார் சைக்கிள் ஒன்றும் பொலிஸார் கைப்பற்றியிருப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)

## தேசியத் தலைவர்...

வாகக் கலந்துரையாடியதாகவும், இப் பிரச்சினையைச் சுமூகமாகத் தீர்க்க முடியும் எனவும் நம்பிக்கை தெரிவித்துள்ள அவர், இப் பிரச்சினை குறித்து தமிழ்மக்களுக்கும், சர்வதேசத்திற்கும் தலைவர் பிரபாகரன் விரைவில் தெளிவுபடுத்துவார் எனவும் தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறு இருக்க கிழக்கு மாகாண மூத்த தளபதி கேணல் கருணா தமது நிலைப்பாட்டை விளக்கித் தலைவர் பிரபாகரனுக்குக் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான கொக்கட்டிச் சோலையில் இருந்து வெளிவரும் தமிழ் அலைப் பத்திரிகை அக்கடிதத்தை முழுமையாகப் பிரசுரித்துள்ளது.

அதில, மட்டக்களப்பு அம்பாறை மாவட்டப் போராளிகள் வடக்கு யுத்த முனையில் உயிரிழந்தமை, தொடர்ந்தும் ஜெயந்தன் படையணியாகப் பணியாற்றுகின்றமை தமிழீழ அரசியல்துறை, தமிழீழ காவல்துறை உட்பட 30 துறைகளைக் கொண்ட தமிழீழ நிர்வாகத்துறையில் எந்தவொரு துறையிலும் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டப் போராளிகள் எவரும் நியமிக்கப்படாமை குறித்துச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இனிமேல் இம்மாவட்டங்களில் இருந்து போராளிகளை வடபகுதிக்கு அனுப்பி வைப்பதற்கு இம்மாவட்டப் பெற்றோர்கள் அனுமதிக்கமாட்டார்கள். தற்போதுள்ள வாய்ப்பைப் பயன்படுத்தித் தென்தமிழீழ மக்களுக்குப் பணியாற்ற விரும்புகிறோம். தமிழீழ நிர்வாகத்துறையின் ஊடாக உங்களின் தலைமையின்கீழ் நேரடியாக, சுதந்திரமாகச் செயற்பட விரும்புகிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது ஒருபுறம் இருக்க நேற்று மட்டக்களப்பு நகரில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்கள் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். (த)

## தலைமன்னார் மீனவர் மூவர் இந்தியக் கடற்படையினரால் கைது

தலை மன்னார்ப் பகுதி மீனவர்கள் மூவர் இந்தியக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இச் சம்பவம் நேற்று காலை இடம் பெற்றுள்ளது. தலைமன்னார் பகுதியைச் சேர்ந்த மூன்று மீனவர்களும் மீன்பிடித்தலில் ஈடுபட்ட வேளை இவர்களை இந்தியக் கடற்படையினர் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டுள்ள மூவரும் தமிழ்நாடு மண்டபம் முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், இவர்கள் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ச)

## புதிய போர்...

முன்னணி அரசுடன் யுத்தநிறுத்த உடன்படிக்கையைச் செய்துகொண்டுள்ள விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை விட்டுப்பிரிந்து தனிவழி செல்ல கேணல் கருணா தீர்மானித்திருப்பதாக நேற்றிரவு பி.பி.சி.தெரிவித்துள்ளது. (ம)

## தலைவரின்...

கொண்டுள்ளதாகத் தெரிவித்தார். இதேவேளை, கிழக்கில் ஏற்பட்ட நெருக்கடி நிலையை அடுத்து கருணாவை முதலில் சந்தித்த செய்தியாளர் சிமாலி சேனநாயக்க என்பதும் குறிப்பிடத்தக்கது. (ந)

தேவை
அனுபவம் நிறைந்த கணனி பக்க அமைப்பாளர்கள் தேவை
ஆண், பெண் இரு பாலாரும் விண்ணப்பிக்க முடியும்.
தகுதியானவர்கள் சுய விபரம் அடங்கிய விண்ணப்பத்துடன் நேரில் வரவும்.
நிர்வாக உத்தியோகத்தர்
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

யாழ்.மண்ணில் அழகுக்கலை நிபுணர் டாக்டர் திருமதி பிரபாரெட்டி



யாழ்.மண்ணில் முதன் முறையாக இந்தியாவின் பிரபல்யம் வாய்ந்த
Praba's Institute of Beauty Theraphy & Health Care Management
நிறுவனத்தின் இயக்குநராகிய டாக்டர் திருமதி பிரபாரெட்டி
(M.A.,M.S,BEMS)(World Diploma in hair colouring in France), (Cinema Secrate in London)
அவர்களும் அவரது குழுவினரும் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ளார்கள்.

- இவர்கள் நடாத்த இருக்கும் அழகுக்கலை பற்றிய பயிற்சிகள் அனைத்தும் இன்று காலை 9.00 மணிக்கு (புதிய நேரம்) ஆரம்பமாகின்றன.

பயிற்சிகள் அனைத்தும் நடைபெறும்
இடம் : Y.M.C.A கட்டிடம் (கச்சேரி முன்பாக)
இல.109, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
காலம் : இன்று (06.03.2004) சனிக்கிழமை.
நேரம் : காலை 9.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை
(மதிய போசனம் வழங்கப்படும்)

- இப் பயிற்சி வகுப்பில் பங்குபெற்றும் அனைவருக்கும் டாக்டர்.திருமதி.பிரபாரெட்டி அவர்களால் பெறுமதி மிக்க உங்கள் புகைப்படம் பொறிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும்.

முக்கிய குறிப்பு:— இன்றைய தினம் மேற்படி பயிற்சி வகுப்பில் இணைய விரும்புவோர் 9.00 மணிக்கு முன்னர் Y.M.C.A கட்டிடம் (கச்சேரி முன்பாக) வந்து ரூ.6000/= ஐ கட்டணமாக செலுத்தி பயிற்சி வகுப்பில் இணைந்துகொள்ளலாம்.

- இன்று 'யாழோசை விளம்பரத்திற்கு' அருகில் உள்ள எங்கள் காரியாலயம் மூடப்பட்டிருக்கும்
இவ் அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்

தொலைபேசி: 071-2346781, 077-6070531
(8429)

புதிய களஞ்சிய இடமாற்றம்
இதுவரை காலமும் இணுவிலில் இயங்கி வந்த ஜி.ரி.இசட் வட புனரமைப்புத்திட்ட களஞ்சியம், 01.03.2004 முதல் மீளமைப்புக்கான ஜேர்மன் வங்கியின் (KfW) நிதி உதவியுடன் அண்மையில் மறுசீரமைக்கப்பட்ட அரச களஞ்சியத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.
ஆலோசகர்
ஜி.ரி.இசட் – வட புனரமைப்புத்திட்டம்
(சி-7379)

கண்ணீர் அஞ்சலி
சங்கானை அபிராமி ரெக்ஸ் உரிமையாளர்
திரு.இ.குணதீஸ்வரனின் அன்புத்தாயார்
திருமதி பூபதி இராசலிங்கம்
அவர்களின் மறைவுச் செய்தியை அறிந்து அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக்கின்றோம்.
விநாயகர் பட்டுச்சோலை
பிரதான வீதி, சங்கானை.
(8430)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.03.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.